Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 348
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 15 ஜுலைக் 30 வியாழக்கிழமை (28-1-71)

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

# சோஷலிஸஇலக்கை அடைய கூட்டுறவுக்கு பெரும் பங்கு

## புனரமைப்பு நடவடிக்கை பற்றி வர்த்தக அமைச்சர்

கோட்டை, புதன்

சோஷலிஸத்தை அடைவதற்கு கூட்டுறவு இயக்கம் எதிர்காலத்தில் பெரும் பங்குவகிக்கவிருக்கிறது. நாட்டின்பொருளாதாரத்தில் மக்கள் தம்மைத்தாமே ஈடுபடுத்திக்கொள்ளும்வகையில் கூட்டுறவு இயக்கம் மறுசீரமைப்பு செய்யப்படும் என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினர்.

கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள ஊழல்களை அகற்றி, சோஷலிஸப் பாதையில் நாட்டை இட்டுச் செல்வதற்கு மக்கள் அரசாங்கம் துரிதநடவடிக்கைகளை எடுத்துவருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநாட்டின் வர்த்தக அமைப்பை முற்றாக மாற்றி அமைத்து, ஏகபோக உரிமைகளைப் பறித்துஇந்நாட்டு மக்கள் கைக்கு இதனைக் கொண்டுவருவதே மக்கள் அரசாங்கத்தின் லட்சியமென்று அவர் சொன்னார்.

கூட்டுறவு இயக்கத்தில் முதலீடு, நிர்வாகம், ஊழியர்கள் ஆகியனவற்றை ஒன்றுக்கொன்று பிணைத்து ஊழலற்ற ஒரு கூட்டுறவு அமைப்பு முறையை ஏற்படுத்தி நாடு சோஷலிஸத்தைநோக்கிச்செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதே நோக்கமென்றும் திரு பி இலங்கரத்தின தெரிவித்தார்.

புனரமைப்புச் செய்யப்பட்ட முதலாவது கூட்டுறவுச்சங்க அங்குரார்ப்பண விழாவில் பேசுகையிலேயே இவர் இவைகளை வெளியிட்டார்.

## மன்னார் ப.ச. தலைவர் பதவி இழந்தார்

மன்னார், புதன்

மன்னார் பட்டனசபைத் தலைவர் ஜனாப் எம். எஸ். அப்துல் ரஹீம், தலைவர் பதவியிலிருந்து பொதுவிவகார உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சரினால் நீக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட கஸட் அறிவித்தலில் வேண்டுமென்றே கடமைகளை புறக்கணித்ததற்கும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்கும்போதிய சாட்சியங்கள் இருப்பதாகவும் தகுதியில்லாமவிருப்பதாகவும் சீர்கேடான நிர்வாகம் செய்ததாகவும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும் இதன் காரணமாகவே பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பதவி நீக்கஞ்செய்யப்பட்டுள்ள ஜனாப் ரஹீம் கடந்த பொதுத்தேர்தலில் மன்னார் தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்டுதோல்வியடைந்தவர்.

## 'தமிழுக்கு உரியஇடம் கொடுத்துள்ளோம்'

நல்லூர், புதன்

'தங்களுக்கு அனுப்பிய அழைப்பிதழில் தமிழ் இடம் பெறாததையிட்டு நான் வருந்துகிறேன். அது தவறுதலாக நடந்த பிழையே ஒழிய திட்டமிட்ட புறக்கணிப்பல்ல. இதுபோன்ற தவறுதல் ஏதும் நேராவண்ணம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். எமது கூட்டுஸ்தாபனத்தில் தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளதுஎன்பதைமிக்கமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு ஈ ஆர் எஸ் குமாரசாமி. கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேற்பிள்ளைக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கூட்டுஸ்தாபனம் அனுப்பிய அழைப்பிதழ் ஒன்றில் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதனை திரு கதிரவேலுப்பிள்ளை எம் பி ஆட்சேபித்து எழுதிய கடிதத்திற்கே திரு. குமாரசாமி மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

— —

முசலி, புதன்

மன்னார் மாவட்டத்திலுள்ள அரிப்பு என்னும் கிராமத்தில நாலு கலன் கசிப்பு முசலிக் காரியாதிகாரியால் பிடிபடப்பட்டது இக்கசிப்பு வைத்திருந்தவரை முசலிக் காரியாதிகாரி வைத்திலிங்கம்சொக்கலிங்கம்கிராம சேவையாளர் உதவியுடன் பிடித்துள்ளார்.

## தீரச்செயல் புரிந்த குழந்தைகள்

புதுடில்லி. ஜன 27

தீரச்செயல் புரிந்த ஆறு குழந்தைகளுக்கு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி வெள்ளிப் பதக்கங்களை வழங்கினார்.

கழுதைப் புலியொன்றைச் சுட்டுக்கொன்றஒருபையன்' நீரில் மூழ்கவிருந்த குழந்தையைக் காப்பாற்ற ஆற்றில் குதித்த சிறுமி, கொள்ளைக்காரன் ஒருவனைச் சுட்டுக்கொன்ற பையன் ஆகியவர்களுக்கு வீரப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

## கரைச்சி கி. சபை புதிய தலைவர்

கிளிநொச்சி, புதன்

கரைச்சிக் கிராமசபைத் தலைவராக திரு கா. செல்லையா தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக திரு. பிரான்ஸிஸ் சேவியர் தெரியப்பட்டார்.

கிராமசபைக் காரியாலயத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. என். நல்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இத் தெரிவில் போட்டியிட்ட முன்னாள் தலைவர் திரு. த. செல்லத்துரை 8 வாக்குகளையும் திரு. செல்லையா 13 வாக்குகளையும் பெற்றனர். திரு. செல்லையா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர் தெரிவில்போட்டியிருக்கவில்லை'

தேர்தல் முடிவில் சகல அங்கத்தவர்களும் பரந்தனிலிருந்து கிளிநொச்சிவரை ஆதரவாளர்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கயானா பிரதமர் தாயகம் திரும்பினார்

கோட்டை, வியாழன்

நான்கு நாள் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு தாயகம் திரும்பினார் கயானா பிரதமர் பேர்ன்காம்.

நேற்று இரவு 7-30மணிக்கு சற்றும் முன்னதாக பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்து அவர் புறப்பட்டார்.

நேற்றுப்பகல் அவர் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவைச் சந்தித்துப் பேசினார் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கயானாப் பிரதமருக்கு நேற்று மதியபோசனவிருந்தை அளித்தார்.

கொழும்பு 'ஹோல்பேஸ்" ஹோட்டலில் நடந்தபத்திரிகையாளர் மகாநாட்டிலும் நேற்றுமாலை கலந்துகொண்டார்.

இலங்கை மக்களின் அன்பைச் சுமந்து செல்வதாக கயானா பிரதமர் தமது பிரிவுச்செய்தியில் கூறினார்.

## யானைகள் நீராடும் அழகை ரசித்தார் கனடா பிரதமர்!

கண்டி, புதன்

இலங்கை யானைகள் நீராடும் அழகைப்பார்த்து ரசித்தார் கனடா பிரதமர் திரு. பியர்ரே ட்ரூடோ. கட்டுகஸ்தோட்டையில் இந்தக் காட்சி ட்ரூடோவை இன்று காலை வெகுவாகக் கவர்ந்தது.

தமது நாடு இலங்கைக்கு வழங்கிய ரயிலிலேயே கொழும்பிலிருந்து கண்டி வந்து சேர்ந்தார். கனடா பிரதமர் இவருடன் உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் கூடவந்தார்.

கண்டி புகையிரத நிலையத்தில் கனடா பிரதமரை காணி அமைச்சர் திரு. கொப்பேகடுவா மாலைசூட்டி வரவேற்றார். அங்கிருந்து ட்ரூடோ தலதா மாளிகைக்குச் சென்றார் கலாசாமாளிகையை அமைச்சர்கள் பீலிக்ஸும், கொப்பேகடுவாவும் சுற்றிக் காண்பித்தனர்.

தலதா மாளிகையில் மல்லிகையையும், தாமரையையும கனடா பிரதமர் ட்ரூடோ காணிக்கையாகச் செலுத்தினார்.

தலதா மாளிகையிலிருந்து கண்டிக் கலைக்கழகத்துக்கு சென்று பார்வையிட்டார்.

கட்டுகஸ்தோட்டைக்கு கனடா பிரதமர் அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு யானைகள் நீராடி மகிழும் காட்சியை ரசித்தார்.

இதன் பின்னர் கனடா பிரதமர் மல்வத்தை அஸ்கிரிய பீட மகாநாயக்கா தேரோவை சந்தித்தார்.

## காரணமின்றி வராதுநிற்கும் அரசாங்க ஊழியர் மீது கண்காணிப்பு

கோட்டை, புதன்

கிரமமில்லாமலும், தக்க காரணமின்றிக்காரியாலயத்துக்கு வராது நிற்கும் அரசாங்க ஊழியர்களை அரசாங்கம் கடுமையாக எச்சரித்துள்ளது.

இத்தகைய அரசாங்க ஊழியர்களைக் கண்காணிப்பதற்கு நிரந்தர காரியதரிசிகளைக் கொண்ட விசேஷகமிட்டியொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. இக்கமிட்டி ஊழியர்கள் காரியாலயத்துக்கு தாமதித்துவருதல் கடமையில் அசிரத்தையாக விருத்தல்தக்ககாரணமின்றி காரியாலயம் வராதிருத்தல் ஆகியவற்றைக் கவனித்து அவர்களுக்கு என்னசெய்ய வேண்டுமென்பது குறித்து அரசாங்கத்திற்கு சிபார் செய்யும். மேற்படி குறைபாடுகள் குறித்துப் பொது மக்கள் புகார் செய்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த விசேஷ குழுவை நியமித்துள்ளது.

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

6 மாபிள்கல்லுமேசைகள், 24 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு வே. ஞானி அச்சுவேலி (லிபேர்ட்டி தியேட்டர் முன்) 2450

### தேவை

பெண் தட்டெழுத்தாளர் தேவை. யாழ்ப்பாணத்திலுள்ளோர் விரும்பத் தக்கது. திருஞானஸ் அன் கோ ஓடிற்றேஸ், பஸ் நிலையத்திற்கு எதிரே, ராணித் தியேட்டருக்கு அருகே. யாழ்ப்பாணம். 2686

**கார்:**

நல்ல நிலையிலுள்ள E N போட் பிறிபெக்ற் (Ford Prefect) அல்லது F N A/35 கார் தேவை. தொடர்பு கொள்ளவும். வே. சண்முகநாதன், மாப்பாண ஆரி காரைநகர். 2687


## 'நவம்' பேசுவார்

காரைதீவு, புதன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தினர் நாளை 29-ம் திகதி நடத்தவிருக்கும் விசேட கூட்டத்தில், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும், தீவுப்பகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் 'இன்றைய தமிழரின் இக்கட்டான நிலையும் அவர்தம் எதிர்காலமும்' எனும் பொருள் பற்றி உரையாற்றவிருக்கிறார்.


நொத்தாரிஸ்மார் சட்டம் 107ம் அத்தியாயம் 7ம் பிரிவின்படியான

### அறிவித்தல்

சாவகச்சேரி தெற்கு வல்லிபுரம் சின்னையா ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரிக் கோட்டு நீதிவிசாரணைக்குட்பட்ட பிரிவில் தமிழ் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க என்னை நியமிக்கும்படி இத்திகதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்புப் பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய இருக்கின்றேன் என்பதை இதனால் அறியத்தருகிறேன்.

வ. சின்னையா,
N/17 /N 920

சாவகச்சேரி தெற்கு,
சாவகச்சேரி,
23-1-71 2747


## சிந்து காளைகள் இறக்குமதி

கிளிநொச்சி, புதன்

விவசாயப் பகுதிகள் தற்போது சிந்த 'சிந்து' இனக்காளைகளை இறக்குமதி செய்துள்ளனர். கிளிநொச்சி மாங்குளம் பகுதிகளில் உள்ள கிருஷிக பிரிவுகள் மூலம் இவை விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆனால் கடந்த சிலவாரங்களாகக் கால்நடைகளுக்கான செயற்கை உணவு இல்லாததால் பெரும் கஷ்டமேற்பட்டுள்ளதாம். விவசாயத் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டும் குறிப்பிட்ட உணவுத் தட்டுப்பாடு நீங்கவில்லையாம், எனக் கால்நடை வளர்ப்பவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# மகாஜனா, கொக்குவில் இந்து இறுதிப் போட்டிக்குத் தெரிவு

## கொழும்பு ஸாகிரா தோல்வி

[நமது நிருபர் 'தேவா']

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் அகில இலங்கை மாவட்டப் பாடசாலை சாம்பியன்களிடையே நடைபெறும் முதலாவது 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியின் 2-வது நாள் போட்டியை யாழ்ப்பாணமேயர் திரு. ரி. எஸ். துரைராசா தொடக்கிவைத்தார்.

நேற்று நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளன.

### கொழும்பு சாகிரா தோல்வி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் கொழும்பு சகிராக்கல்லூரியும மோதிய ஆட்டத்தில், மகாஜனக்கல்லூரி வெற்றிபெற்றது. ஆட்டம் ஆரம்பமாகி 15 நிமிடங்களின்பின் சாகிராக் கல்லூரியின் முன்னணி வீரர் எஸ். எம். ஐபீர் ஒருகோலைப் போட்டார். இடைவேளையின்போது கொழும்புக் கோஷ்டியினரே 1—0 கோலால் முன்னணியில் நின்றனர். இடைவேளையின் பின் மகாஜனக்கல்லூரியின் ஆட்டம் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறியிருந்தது. இக்கோஷ்டியின் முன்னணி வீரர் மோகன்ராம் மிகச் சிறப்பாக விளையாடினார். இவர் மின்னல் வேகத்தில் தமது கோஷ்டியின்சார்பில் முதலாவது கோலைப் போட்டார். இதன்பின் இக்கோஷ்டியின்வலதுகரை முன்னணி வீரர் கெய்சர் மேலும் ஒரு கோலைப் போட்டார். இதன் பின் கொழும்புக்கோஷ்டியினரால் கோல் ஏதையும் போடமுடியாதபடி மகாஜனக் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் தடுத்துவிட்டனர். ஆட்டமுடிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றிபெற்று இறுதிப்போட்டியில்மோதுவதற்குத்தகுதிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

நாவலப்பிட்டி சென்மேரிஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில் கொக்குவில்கோஷ்டி மிக இலகுவாக வெற்றிபெற்றது. இடைவேளைக்கு முன்பாகவே இரு கோல்களைப் போட்டனர். இக்கோல்களை கே. சிவநேசனும், புவநேசனும் முறையே போட்டனர்.

இடைவேளையின்பின் மிக வேகமாகமுன்னேறிய கொக்குவில் கோஷ்டியினர் மேலுமிருகோல்களை அடுத்தடுத்துப் போட்டனர். இக்கோல்களை வீரர்கள் பி. தனஞ்சயனும், மனோகரனும் மிகஇலகுவாகப் போட்டனர். கொக்குவில் இந்து மூன்றுவதுகோலைப் போட்டபின் நாவலப்பிட்டிக்கோஷ்டியின் முன்னணிவீரர் ரி. பி. சமாத் ஒரு கோலைப்போட்டார்.

ஆட்டமுடிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி நாவலப்பிட்டி சென்மேரிஸ் கல்லூரியை 4-1 கோல்களால் தோற்கடித்துஇறுதிப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதிபெற்றது.

இந்தப்போட்டிக்குத் திரு. நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)

சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்

**வின்ஸர்** யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

**வெஸ்லிசினிமா**

மணிப்பாய்
தினசரி 3 காட்சிகள்
எம்.எல்.ஆர். - தேவிகா
நடித்த
மறக்கமுடியுமா?

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
காந்தராவ் — ராஜ்ஸ்ரீ
நடித்த
மன்னனைக காத்த மாவீரன்

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 shows
Christopher Lee
in
THE DEVIL'S BRIDE
(Colour)

**REGAL** Jaffna
Daily 3 shows
Poya days 10-30 A M.
THE SPARTAN
GLADIATERS

## நிர்வாக உதவியாளர் தேவை

வட இலங்கை வர்த்தகர் கைத்தொழிலாளர் சங்கம்
(North Ceylon Chamber of Commerce & Industries)

காரியக் குழுவின் மேற்பார்வையின் கீழ் தன்னந்தனியராக எங்கள் சங்கத்தின் கடிதப்போக்குவரத்து, தட்டெழுத்து, வாசிகசாலைப் பரிபாலனம், கூட்ட ஒழுங்குகள் முதலிய சகலநிர்வாக சந்தோர் வேலைகளையும் செய்யக் கூடிய ஒரு முற்போக்கான, உற்சாகமுள்ள, சேவை மனப்பான்மையுள்ள படித்த அனுபவஸ்தர் உடனே தேவை. ஆங்கிலம், தமிழ் அறிவு அவசியம். சிங்களமும் தெரிந்தால் விசேடம். வட மாகாணத்தின் வர்த்தக, கைத்தொழில், பொருளாதார விருத்தியில் மோகமுடைய இளைப்பாறிய அரசாங்க அல்லது தனித்துறை நிர்வாக அதிகாரி விரும்பப்படுவர். வசிக்க இடவசதியும் மாதம் ரூ. 150/- சன்மானமும் கொடுக்கப்படும். சகல தகவல்களுடன் உடனே விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
வ. இ. வ கை. சங்கம்,
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இன்று முதல் ஆரம்பம்!

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — ஜெயலலிதா
பாலாஜி, நாகேஷ், மேஜர் சுந்தரராஜன், தேவிகா,
குமாரிசச்சு, பானுமதி
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்
(சஸ்மன்ட் கலர்)

# உகண்டாவில் பல கட்சி அரசு ஏற்படும்

# ஒபட்டே விரும்பினால் திரும்பி வரலாம்

## மேஜர் ஜெனரல் அறிவிப்பு

நைரேபி, ஜன. 27

உகண்டாவில் ஆட்சியை ராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை மாறி மெதுவாக அமைதி திரும்பிக் கொண்டிருக்கின்றது. என்றாலும் நாடு முழுவதும் அவசரகால சட்டம் அமுலிலிருக்கின்றது.

உகண்டாவின் முன்னாள் அதிபர் டாக்டர் மில்டன் ஒபட்டே தாம் நாடு திரும்பப் போவதாகக் கூறியிருக்கிறார்.

தாம் பதவியிலிருந்து விலக்கப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் இன்னமும் பதவியிலிருப்பதாகவே தாம் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

உகண்டாவில் இன்னமும் சண்டை நடைபெறுவதாக கம்பாலாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் உகண்டாவில் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியுள்ள ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் அமீம் முன்னாள் அதிபர் ஒபட்டே நாடு திரும்புவது பற்றியும் புதிய அரசாங்கம் பற்றியும் கருத்துவெளியிட்டிருக்கின்றார்.

டாக்டர் ஒபட்டே விரும்பினால் உகண்டாவுக்குத் திரும்பி வரலாம் என்று மேஜர் ஜெனரல் அமீம் தெரிவித்துள்ளார்.

டாக்டர் ஒபட்டே ஏற்படுத்திய ஒரு கட்சி அரசாங்க முறை நீக்கப்படும் என்றும் எதிர்க்கட்சி வசதியுடன் பல கட்சி அரசு இயங்குவதற்கு வழி செய்யப்படுமென்றும் மேஜர் ஜெனரல் அமீம் தெரிவித்துள்ளார்.

பழைய மந்திரிகள் பலரும் புதிய அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வார்கள் என்றும் ராணுவத் தளபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புரட்சியை முறியடிக்க வெளிச் சக்திகள் முயற்சி செய்தால் பலம் கொண்ட மட்டும் எதிர்க்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

ஒபட்டே அரசு வீழ்த்தப் பட்டதைத் தொடர்ந்து தெருக்களில் மக்கள் ராணுவ சிப்பாய்களுக்குப் பின்னால் கூட்டம் கூட்டமாக கோஷமிட்டுக்கொண்டு திரிந்தார்கள்.

### டாங்கே ஆஸ்பத்திரியில்

புதுடில்லி ஜன 27

இந்திய கம்யூனிஸ் கட்சித் தலைவர் திரு. டாங்கே மார்புவலிக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

— —

### சோவியத்கலம் வெள்ளியில் இறங்கியது

மாஸ்கோ, ஜன. 27

சோவியத்யூனியன் வெள்ளிக கிரகத்துக்கு அனுப்பிய செயற்கை கிரகங்களில் ஒன்று அந்தக் கிரகத்தில் இறங்கி பூமிக்குத் தகவல்களை அனுப்பத் தொடங்கியிருக்கின்றது. கடந்த டிசம்பர் மாதம் அனுப்பப்பட்ட இச்செயற்கைக்கிரகம் 120 நாட்களில் 32 கோடி கிலோ மீட்டரைக் கடந்து வெள்ளிக்கிரகத்தை அடைந்துள்ளது.

— —

### வணிக மாணவர் குறைகளை தீர்க்கவேண்டும்

உடுப்பிட்டி, புதன்

"வணிக மாணவர் மன்றம் பெயரளவில் மட்டும் இயங்கினால் போதாது. வணிகத்துறை மாணவர்களின் பிரச்சினைகளையும், குறைகளையும் போக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். யாழ். தொழில் நுட்பக்கல்லூரி வணிகத் தகுதிப் பத்திரங்களை அரசாங்க பதவிகளுக்குரிய கல்வித் தகைமையாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த வேண்டும். சுருக்கெழுத்து, தட்டெழுத்து வணிகத் தகுதிப் பத்திரம் பெற்றவர்கள் அரசாங்க இலாகாக்களில் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலை மாறவேண்டும்."

இவ்வாறு யாழ். தொழில் நுட்பக்கல்லூரிவணிக மாணவர் மன்ற ஆண்டுக்கான முதலாவது நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் திரு.ஜே.ஜெயக்குமார் கேட்டுக்கொண்டார். மன்றத் தலைவர் திரு. ப. மகுருஸ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. கே. கனகசபை பேசும்பொழுது தட்டெழுத்து இயந்திரங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய அவசியம் பற்றியும் உதவிக் கல்வியமைச்சர் திரு. துடாவையிடம் இவ்விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதை நினைவூட்ட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

மற்றும் திருவாளர்கள் எம். சிவலிங்கம், அருணாசலம், ந. தவபாலன், க. வேலாயுதம் வி. பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

## 1000 பேரை ஏற்றும் எதிர்கால விமானம்

மாஸ்கோ, ஜன 27

'1000 பேரை ஏற்றிக் கொண்டு மணிக்கு 7000 முதல் 10,000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடிய பயணிகள் விமானங்கள் இந்த நூற்றாண்டின் இறுதியில் தோன்றும்' என்று சோவியத் விமான என்ஜினியர்கள் கூறுகிறார்கள்.

'டியு-144' என்ற சுப்பர் சானிக் பயண விமானத்தைப் புனைவரைவு செய்த பிரபல என்ஜினியர் அலெக்ஸ் துபலோவும் இவ்வாறு கூறுகிறார். எதிர் இரண்டு மணி நேரத்திற்குள் உலகிலுள்ள எந்த இடத்திற்கும் இந்த விமானங்கள் மூலம் சென்று விடலாம் என்று சோவியத் என்ஜினியர்கள் எண்ணுகிறார்கள்.

ஒலியைவிட வேகமாகப் பயணம் செய்யும் எதிர்கால விமானங்கள், தமது பயணத்தின் போது ஏற்படும் கொடிய வெப்பத்தைத் தாங்க வேண்டும். எனவே, 550 டிகிரி செண்டிகிரேட் வெப்பத்தை தாங்கக் கூடிய பெரிலியம் என்ற உலோகத்தால் மேற்கண்ட விமானங்களின் பாகங்கள் செய்யப்படும்.

அடுத்த நூற்றாண்டின் துவக்கத்தில், பெரும்பாலும் தன்னியக்க முறையில் விமானங்கள் கட்டுப்படுத்தப்படும். ஆனால் சிக்கலான நிலைமைகளில் கம்யூட்டர்கள் முடிவு எடுக்காது, விமானியே முடிவு எடுப்பார். மேலும் விமானி ஒருவர் இருப்பதையே பயணிகள் விரும்புவார்கள்.

'எதிர்கால சுப்பாசானிக் விமானங்களில் வசதியான நாற்காலிகளும், ஒவ்வொரு பயணிக்கும் ஒரு டெலிவிஷன் செட்டியும், பல்வேறு சேவைகளைச் செய்ய எந்திர மனிதர்களும் இருப்பார்கள்' என்று சோவியத் விமான என்ஞ்ஜினியர்கள் கூறுகின்றனர்.

—

### ரத்து செய்யப்படும்

யாழ்ப்பாணம். வியாழன்

வெளிமாகாணங்களில் நாலாண்டுகள் சேவைசெய்த ஆசிரியர்களை மேலும் வெளிமாகாணங்களுக்கு திரும்பவும் இடமாற்றஞ் செய்ய வேண்டாம் என்று அகில இலங்கைச் சுவீகரிக்கப் பெற்ற தமிழ்ப்பாடசாலைகள் ஆசிரிய சங்கம் கல்வி அமைச்சரையும், உதவிக் கல்வியமைச்சரையும் அண்மையில் பேட்டி கண்டிருந்தது. அதற்கமைய நாலாண்டுகள் வெளிமாகாணத்தில் கடமையாற்றிய வடபிரதேச ஆசிரியர்கள் அனைவரதும் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்படவுள்ளன என்று கல்விப்பகுதி தெரிவித்துள்ளது.

இது எமது சங்கத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும் என்று மேற்படி சங்கப் பிரமுகர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

# 'எங்கள் பிதா கொலைகாரர் இல்லை'

## மேன்சனின் பெண் சீடர்கள் பிரலாபம்

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜன. 17

ஷெரன்டேட் கொலைவழக்கு வழக்கில் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஹிப்பிகளின் தலைவன் சார்ல்ஸ் மேன்சனின் மூன்று பெண் சீடர்கள் இங்குள்ள நீதிமன்றத்தின் வெளியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் முழங்காலில் இருந்த கண்விழித்துக் கொண்டிருந்தனர். தங்களுடைய "கடவுளும்" "பிதாவுமான" அவர் விடுதலை செய்யப்படும்வரை தாங்கள் அங்கிருந்து நகரப் போவதில்லையென்று அந்த மூன்று பெண்களும் கூறினார்கள்.

"எனக்குத் தெரியும். அவர் யாரையும் கொல்லவுமில்லை. கொலைசெய்யும்படி எவருக்கும் சொல்லவுமில்லை" என்று ஒரு பெண் கூறினார்.

"இங்கே கடந்த ஐந்து மாத காலமாக நாங்கள் காத்துக்கொண்டு இருக்கிறோம். இனிமேலும் இங்கேயே இருக்கவும் செய்வோம். ஆனால் இந்நகர் அதுவரைக்கும் இருக்கப்போவதில்லை. அவர் வெளியில் வருவார். புரட்சியொன்று வந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் எல்லோரும் உங்களையே நியாயம் தீர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று ஒரு பெண் கூறினார்.

நீண்ட தாடிக்காரரான மேன்சனும் மற்றும் மூன்று பெண்களும் குற்றவாளிகள் என்று ஜூரர்கள் தீர்ப்பு வழங்கியபொழுது மூன்று பெண்களும் முழங்காலில் இருந்தார்கள். இவர்கள் நான்கு பேருக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை இனிமேல் விதிக்கப்படும்.

1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெவ்ளயார் இல்லத்தில் வைத்து நடிகை ஷெரன் டேட்டையும் வேறு நான்கு பேர் கொலைகளுக்கும் அதற்கு அடுத்த நாள் இடம்பெற்ற சூப்பர் மார்க்கட் சொந்தக்காரர் லினோலா பியான்காவினதும், அவர் மனைவியினதும் கொலைகளுக்கும் மூலகர்த்தாவென்று மேன்சன் குற்றம் காணப்பட்டார். மேன்சன் தனது சூனியக்காரிகள் என்று அழைத்துக்கொண்ட இளம் பெண்களில் 23 வயதான பாட்ரீஷியா கிரென்விங்கல், 22 வயதான சூஸன் அட்கின்ஸ் ஆகிய இருவரும் ஏழு கொலைகளையும் செய்தார்களென்று குற்றம் காணப்பட்டனர். மூன்றாவது பெண்ணை 21 வயது நிரம்பிய லெஸ்லிவான் ஹவுஸ்டன் லாபியான்காவின் கொலை சம்பந்தமாகக் குற்றம் காணப்பட்டார்.

இந்தத் தீர்ப்பை ஷெரன் டேட்டின் தந்தை கேணல் பால்டேட் வரவேற்றார்.

தீர்ப்பளித்த பொழுது மேன்சன் தாடியைத் தடவிக்கொண்டு அமைதியாக இருந்தார். ஆனால் அவர் வெளியில் கொண்டுபோகப் பட்டபொழுது நீதிபதியைப் பார்த்து "எதிர்வாதத்திற்கு நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவை நீர் மீறிவிடமுடியாது கிழவரே" என்று கத்தினார்.

— —

### கவர்னர் வரவேற்பு: ப. சபை நிதியில் செலவில்லை

மானிப்பாய். புதன்

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த கவர்னர் ஜெனரலுக்கும், தற்காலிக அரசாங்கத் தலைவருக்கும், அமைச்சர் குழுவிற்கும் மானிப்பாய் பட்டினசபைத் தலைவரும், உறுப்பினர்களும் இம்மாதம் 17-ம் திகதி சபைவாயிலில்வைத்து மலர் மாலைகள் சூட்டி உபசரித்தனர்.

உபசரிப்பு வைபவத்திற்கு சரீர உதவி செய்த அன்பர்களுக்கும். சோடினை வேலைகளில் உதவி செய்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தலைவர் நன்றி கூறுகிறார். இவ்விழாவிற்கு மானிப்பாய் பட்டினசபை நிதியில் ஒரு சதமாவது செலவிடப்படவில்லையெனவும். மானிப்பாய் வாழ்மக்கள் செலவிலேயே இது நடந்ததெனவும் தலைவர் தெரிவிக்கிறார்.

— —

### நோயாளர் அவதி

யாழ்ப்பரணம். வியாழன்

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் போதிய டாக்டர்கள் இன்றி நோயாளர்கள் பெரும் அவதிப்படுகிறார்கள் தினமும் நோயாளிகள் தொகை இந்த ஆஸ்பத்திரியில் அதிகரித்துக்கொண்டிருக்கிறதாம். பல டாக்டர்கள் கடமையாற்றிய இவ்வாஸ்பத்திரியில் ஒரு வைத்திய அதிகாரியும் ஒரு அப்போதிக்கரியுமே கடமையாற்றுகிறார்கள் இதனாலேயே நோயாளர்கள் அவதிப்பட நேரிட்டுள்ளது.

(மட்டு-நி)

— —

### மீன்பிடி உபகரணம் தட்டுப்பாடு

மாவிட்டபுரம், புதன்

'மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க மீன்பிடிக் கூட்டுத்தாபன ஏஜன்டுகளுக்குக் கூடிய கோட்டா வழங்க வேண்டும்' என்று மயிலிட்டிக் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் எஸ். சிவகுருநாதன் மீன்பிடி அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

சென்ற 3, 4 மாதங்களாக வடபகுதி மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதனால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே கூடியளவு உபகரணங்களை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இறக்குமதிசெய்து விநியோகிக்க ஆவனசெய்ய வேண்டுமென்று அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மணிவாக்கு

சத்தியத்தையும், அன்பையும் உபாசிப்பவன் நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான்.
—மகாத்மா காந்தி

ஈழநாடு

Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna Telephone: 889

சாதாரண வருஷம் தை மாதம்
15 ம் திகதி (28-1-71)

## இந்தியாவும் பாகிஸ்தானும்

காஷ்மீர் காரணமாக இந்தியாவும், பாகிஸ்தானும் மீண்டும் ஒரு தடவை மோதிக் கொள்ளப்போகின்றனவா? அமைதியை விரும்பும் மக்கள் அச்சத்துடன் இன்று கேட்கும் கேள்வி இதுதான்.

சில வருடங்களுக்கு முன்னர்தான் காஷ்மீர் காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சண்டை ஏற்பட்டு இருபகுதி மக்களுக்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டது. அந்தச் சண்டையில் யாருக்கு வெற்றி என்று ஆராய்வது தேவையற்ற விஷயம்.

இந்தியா பாகிஸ்தான் எனப் பிரிக்கப்படு முன்னர் சகோதரர் போல் வாழ்ந்து வந்த மக்கள் பகைவர்களாகி மோதிக்கொண்டனர். இரு நாடுகளுமே இன்னும் பொருளாதார விடுதலை பெறவில்லை. இரு நாட்டு மக்களுக்கும் பொருளாதாரக் கஷ்டம் நிறையவிருக்கிறது. இந்நிலையில் இரு நாட்டு மக்கள் அதிக பளுவைச் சுமக்கவேண்டி ஏற்பட்டது. இரு நாடுகளும் ஒன்றையொன்று சந்தேகத்துடன் பார்க்கின்றன. இதனால் மேலும் மேலும் தங்கள் பலத்தை வலுப்படுத்திக்கொள்வதில் ஈடுபடுகின்றன. இது மக்களுக்கு உணவும், உடையும் இருப்பிடமும் அளிக்கவேண்டிய பணத்தின் பெரும் தொகையை ஆயுதங்கள் விழுங்குகின்றன. முன்னர் நடந்த சண்டை காரணமாக இரு நாடுகளும் மீண்டும் பொருளாதாரத்தில் பின்னடைந்து செல்ல நேரிட்டது. மீண்டும் இரு நாடுகளும் மோதிக்கொண்டால் இரு நாட்டு மக்கள்தான் நசுங்க நேரிடும். மக்களைப்பொறுத்த வரையில் யுத்தத்தை விரும்பமாட்டார்கள்.

இந்தியாவுக்கு எதிராக வேவு பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் தூதரக உயர் அதிகாரியை, இந்தியா நாற்பத்தெட்டு மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டது. இதற்கு எதிர் நடவடிக்கையாக இதே குற்றச்சாட்டின்மீது பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதரக உயர் அதிகாரி ஒருவரை நாற்பத்தெட்டு மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறவேண்டுமென்று பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டது.

இரு நாடுகளுக்குமிடையில் முன்னர் சண்டை ஆரம்பமாவதற்கு முன் தோன்றிய அறிகுறிகள்தான் இவை. இப்போது அதேநிலை ஏற்படத் தொடங்கியிருப்பது கண்டு அஞ்சுவதற்கு இதுதான் காரணம்.

முன்னர் சண்டையை நிறுத்தச்செய்து இரு நாடுகளுக்கிடையிலும் ஓர் உடன்பாடு ஏற்படுவதற்கு முயற்சி செய்து, அதில் பெருமளவு வெற்றியும் கண்டதில் பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவுக்கு நிறையப் பங்குண்டு.

தாஷ்கண்டில் இரு நாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்ட பிரகடனத்தில் இரு நாடுகளும், எந்தப் பிரச்னைக்கும் பலாத்காரத்தை உபயோகிப்பதில்லை என்பது முக்கிய அம்சம். இந்த ஒப்பந்தத்தை இரு நாடுகளும் பெருமளவு மீறாமல் நடந்துகொண்டு வந்தன. இப்போது நிலைமை மாறிவருவது ஏன்?

இந்தியாவில் லோகசபைக்கும், சில மாநிலங்களின் சட்டசபைகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. பாகிஸ்தானில் பல வருட இராணுவ ஆட்சியின் பின் இப்போதுதான் அங்கு பொதுத்தேர்தல் நடந்து ஜனநாயக ஆட்சி மீண்டும் உதயமாகிக்கொண்டிருக்கின்றது.

இச்சமயத்தில் மீண்டும் காஷ்மீர் பிரச்னை தலைதூக்கி இரு நாடுகளும் மோதிக்கொள்வதற்கான நிலை உருவாகக் காரணம் என்ன?

முன்னைய அனுபவத்தைக் கொண்டு மீண்டும் மோதுவதைத் தவிர்த்து, தாஷ்கண்ட் பிரகடனத்தை மீறாது நடந்துகொள்வதுதான் இரு நாடுகளுக்கும் நல்லது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதுதான் விவேகமும், ராஜதந்திரமுமாகும்.

## பனைத் தொழில் கமிட்டி பெப். 9-ல் யாழ் வரும்

மாவிட்டபுரம், புதன்

பனைத்தொழில் ஆராய்ச்சிக் கமிட்டி அடுத்த மாதம் 9-ம் திகதி வடக்கிற்கு விஜயம் செய்யவிருக்கிறது.

நாட்டின் பனைத் தொழில் அபிவிருத்தி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி தோட்டத் தொழில் துறை அமைச்சர் திரு கொல்வின் ஆர். டி. சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இக் கமிட்டி அடுத்த மாதம் 9-ம் திகதிமுதல் 3 தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி விசாரணைகளை நடாத்தும்.

யாழ் அரசாங்க செயலக பொதுஜன அலுவலகத்தில் நிகழும் இவ் விசாரணையின் போது அரசாங்க ஊழியர் பொதுமக்கள் பல்துறை சங்கங்கள் ஆகியன சாட்சியமளிக்கவிருக்கின்றனர்.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக் கமிட்டியில் பேராசிரியர் கே. குலரத்தினம் பேராசிரியர் எம். பி. பெரேரா, வி. சச்சிதானந்தன், கே. வேலுப்பிள்ளை ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக் கமிட்டியினர் சாட்சியங்களைப் பெறுவதுடன் பனந்தொழில் உற்பத்தி நிலையங்களுக்கும் சென்று பார்வையிடுவார்கள் என அறியப்படுகிறது.

......

கோட்டை, புதன்

வாடிக்கையாளர்களுக்கு பெர்மிட் மூலம் மதுபானம் வழங்கும்படி அகிலஇலங்கை பௌத்த காங்கிரஸ் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது

# பல்கலைக்கழக பிரவே[சம்]

# தமிழ் மாணவரு[க்கு]

1970ம் ஆண்டு டிசம்பர்மாதம் 10-ம்திகதி பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட முறை குறித்து யாழ்ப்பாண மகாநாடு ஆராய்ந்தது. பின்னர் இந்தப் பல்கலைக்கழக அனுமதிபற்றியும் எந்த அடிப்படையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் என்பது குறித்தும் பத்திரிகைச் செய்தியொன்று விபரமாக வெளியிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படும் சகல பொறியியல் மாணவர்களுக்கும் முதலில் பொதுவான ஒரு கூட்டுத்தொகை அளிக்கப்பட்டிருந்தது. (அந்தக் கூட்டுத்தொகை 235 ஆக நம்பப்படுகிறது) இந்தக் கூட்டுத்தொகை அடிப்படையில்கணிக்கப்பட்டு தகுதியான மாணவர்களுக்கு 11-8-1970ம்திகதி பல்கலைகழகத்திற்கு அனுமதிக்கப்பட்டதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதற்குப் பின்னர் மேற்படி கூட்டுத் தொகைவிடப்பட்டு அதன் இடத்தில் இரண்டுவித கூட்டுத்தொகைகள் கொண்டுவரப்பட்டன. அதாவது சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு 227 புள்ளிகளைக் கூட்டுத்தொகையாகவும், தமிழ் மாணவர்களுக்கு 250 கூட்டுத்தொகையாகவும் கணிக்கப்பட்டது. இவ்வாறு பின்னர் புள்ளிகளின் தொகைகளில் மாற்றம் செய்ததற்குக் காரணம் இன மதஅடிப்படையில் கோட்டா முறையில் இவர்களுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடமளிக்கும் நோக்கமேயாகும். இந்த நோக்கத்தின் காரணமாக சிங்கள மாணவர்களுக்கான கூட்டுத்தொகை 227 ஆகக் குறைக்கப்பட்டு அவர்களது எண்ணிக்கை 50ல் இருந்து 89ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்து பொறியியல் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட சகல மாணவர்களதும் முழுத்தொகையும் 151 ஆகும். தமிழ் மாணவர்களுக்கான கூட்டுத்தொகையை 250 ஆக அதிகரித்ததால் பொறியியல்பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட 100 மாணவர்கள் 58ஆகக் குறைக்கப்பட்டனர். மொழியடிப்படையிலேயோ அல்லது இராமப்புற, நகரப்புற பாடசாலைகள் என்ற தொடுஅடிப்படையிலேயோ இருவேறுவிதமான கூட்டுத்தொகைகள் கணிக்கப்படவில்லை. கொழும்புப்பல்கலைக்கழக பொறியியல் பிரிவுக்கு ஆங்கிலமூலம்பரீட்சையெடுத்து 235 புள்ளிகளுக்கும் மேலான கூட்டுத் தொகையைப் பெற்ற தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் அவர்களுக்கு 11-8-70-ல் இவ்வனுமதிக்கான கடிதமும் அனுப்பப்பட்டிருந்தது. இந்தமாணவர்களுக்குக் கட்டுப் பொத்தையில் இடமளித்து கொழும்பில் வீட்டுவசதியிருந்தும்கூட சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு பேராதனையில் இடமளிப்பதற்காகவே மேற்படி கூட்டுத் தொகை கணிப்பு செய்ததற்குக் காரணமாகும். இந்த சிங்களமுஸ்லிம் மாணவர்கள் தமிழ் மாணவர்களிலும் பார்க்கக் குறைந்தபுள்ளிகளையே பெற்றிருந்தார்கள். இதனால் இவர்களுக்கு 11-8-70ம் திகதியன்று கடிதமும்அனுப்பப்படவில்லை. இத்தகையவர்களுக்கு இன்று பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பிரிவில இடமளிக்கப்பட்டிருக்கிறது. பொறியியல் பிரிவுக்கு எவ்வாறு மறுபடி கூட்டுத்தொகைகளில் மாற்றம் செய்யப்பட்டதோ அதே போன்று வைத்தியப் பிரிவுக்கும் கூட்டுத்தொகையில் மாற்றம் செய்யப்பட்டது. வைத்திய பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட 252 மாணவர்களில்சிங்களமாணவர்களதுகூட்டுத் தொகை 229 ஆகக் குறைக்கப்பட்டு சிங்கள மாணவர்கள் 137 ஆக அதிகரிக்கப்பட்டார்கள். அதே வேளையில் தமிழ் மாணவர்களுக்கு கூட்டுத்தொகையை 250 ஆகஅதிகரித்து அவர்களது எண்ணிக்கை 103ஆகக் குறைக்கப்பட்டது வருங்காலத்தில் சிறந்த பொறியியலாளராகும், தன்மை வாய்ந்த தமிழ் மாணவர்கள் கட்டுப்பெத்தையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிங்கள மாணவர்களிலும் பார்க்க 20 புள்ளிகள் அதிகமாகப் பெற்றிருந்தும் கட்டுப்பெத்தைக்கே அனுமதிக்கப்பட்டார்கள் இதேவேளையில் சில தமிழ் மாணவர்களுக்கு 11-8-70ல் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தும் இறுதியில் அவர்களுக்கு கட்டுப்பெத்தையில்கூட இடமளிக்கப்படவில்லை. இதே போன்று வருங்காலத்தில் டாக்டர்களாகத்திகழவேண்டிய பல தமிழ்மாணவர்கள் தங்களுக்குக்கிடைக்கக்கூடிய வாய்ப்பை இழந்துள்ளார்கள். மேலும் தமது சிங்களச் சகோதரர்களிலும் பார்க்கக் கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தும் சில தமிழ் மாணவர் விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டாலும் அனுமதிக்கப்படலாம். மற்றவர்கள் பல்கலைக்கழகக் கல்வி பெறுவதில்இருந்தே நீக்கப்படலாம். மேலும் உயிரியல், பௌதிக விஞ்ஞானப் பிரிவுகளில் நிரப்பப்பட வேண்டிய இடங்கள் இன்னும் உள்ளதாக அறியும் பொழுது அது யாவருக்கும் வருத்தத்தைக் கொடுப்பதாகும். மேற்கூறியவற்றிலிருந்து எமது உயர்கல்வி பிரச்சினைக்குள்ளானது என்பது தெளிவாகிறது. புள்ளி விபரப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டபின்னர் இன அடிப்படையில் புள்ளிவிபரக் கூட்டுத்தொகை கொண்டுவரப்படுகிறது.

11-8-70ல் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் "நீங்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பொறியியல், வைத்தியப் பிரிவுகளில்கல்வி கற்கலாம், இதற்குத் தெரிவு செய்யப்படாதவர்களுக்கு விஞ்ஞானப் பிரிவுகளில் ஒன்றில் கல்விகற்க வாய்ப்பளிக்கப்படும் இது உறுதியானதாகும். இதில் இருந்துபின் போகவேண்டியதில்லை" எனக் குறிப்பிட்டிருந்தது எனவே அரசாங்கம் இந்தப் பல்கலைக்கழக அனுமதியை மறுபரிசீலனை செய்யவேண்டும் என நாம் விரும்புகிறோம். ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது கடமைக்காகவோ அன்றி மாணவர் நலனுக்காக அரசாங்கம்இதைச் செய்ய வேண்டுமென்பதே எங்களது வேண்டுகோளாகும். யாவராலும் வேறுபாடின்றி சமத்துவமாகத் தகுதியடிப்படையில் உயர்கல்வி பெறக்கூடியதொன்றாகும். இந்த உரிமை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் முக்கியமாகப்

பல்கலைக்கழகத்துக்கு மாணவர் அனுமதி கு[றித்து]
கடந்தாண்டு 10-ம்திகதி யாழ்ப்பாண மகாநா[டு ஆரா]
ய்ந்து பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பியி[ருந்தது]
அந்தமகஜர் கல்விமந்திரியின் கவனத்துக்குக்கொ[ண்டு]
வரப்பட்டிருப்பதாகப் பிரதமர் பதிலனுப்பி[யிருந்]
தார். மேலும் யாழ்ப்பாண மகாநாட்டு அ[...]
தவர்கள் மேற்படி மகஜரில் உள்ள இழுக்கி[...]
யங்களைச் சுட்டிக்காட்டி இப்பிரச்சினை குறி[த்து]
பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவத[ற்கு]
கோரி எழுதிய கடிதம் இங்குதரப்படுகிறது
பல்கலைக்கழக அனுமதிபற்றி அடுத்தமாதம் [...]
திகதி யாழ். நகரசபை மண்டபத்தில் நடை[பெற]
விருக்கும் மகாநாட்டிலும் ஆராயப்படவிருக்[கிறது]

பொறிக்கப்பட்டிருக்கிறது. 1960-ம் ஆண்டு கல்வித் துறையில் பாகுபாடு காட்டப்படுதலையெதிர்த்து யுனெஸ்கோ மகாநாடு ஒன்றை நடாத்தியது. இன, மத, நிற, மொழி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு கல்வித்துறையில் வேறுபாடு காட்டுவதை முற்றாக நீக்கிவிடவேண்டுமென அங்கத்துவ நாடுகளை யுனெஸ்கோ கோரியது. கல்வி அடிப்படை மனித உரிமையாதலால் மேற்படி மகாநாடு அங்கத்துவ நாடுகள் யாவும் தங்கள்நாட்டின் கல்வித் துறையில் அங்குள்ள நாடற்றவர்களுக்கும் சமவாய்ப்பு அளிக்குமென மகாநாடு எதிர்பார்த்தது.' பல்கலைக்கழகக் கல்விமீதான ராதா கிருஷ்ணன் அறிக்[கை ...] வேறு சமுதாய[ங்களுக்]கிடையே ஸ்தான[...] தப்படுத்துதலைக் [...]க் கண்டித்துள்ள[து ...]னில் அடிப்படைய[...] னது தனிப்பட்ட [...] உரிமையாகுமேயன்[றி ...]

### கே.நேசை[...]

சமுதாயத்தின் [...] கா[...]னவும் [...] குறி[ப்பி]ட்டுள்ளது [...] பிற்போக்கு ஆ[...] ஒரு சமுதாயத்தின[...] போக உரிமையாக [...]வித்துறையில் [...] காட்டுதல் என்ப[...] ராதாகிருஷ்ணன[...] கையிலுள்ள [...]

## 'தமிழினம் என்று[ம் ...]
## அடிமைகளாக வாழவி[ல்லை' ...]

வல்வெட்டித்துறை, புதன்

"இந்தநாட்டில் தமிழினம் என்றும் தன்மானத்துடன் வாழவேண்டும். அவர்கள் இந்த நாட்டில் ஆளப்படும் இனமாகவும், அடிமை இனமாகவும் எப்பொழுதும் வாழ்ந்ததில்லை. இன்று தமிழராகிய நமக்கு பல இன்னல்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன நமதுஇனத்தை அழிப்பதற்கு ஆட்சியாளர் பலதிட்டங்களை தீட்டியுள்ளனர். சோஷலிஸ அரசாங்கம் எனக் கூறிக்கொள்ளும் இன்றைய ஆட்சியாளர் ஐரோப்பாவில் ஹிட்லர் ஆட்சி செலுத்தியதுபோல இங்கும் தம்மீது ஆட்சி செலுத்தப் பார்க்கிறார்கள். தமிழராகிய நாம் அதற்கு விட்டுக்கொடுக்காமல்நாமும் இந்த நாட்டின் ஆட்சியாளர் எனவும், நாமும் என்றொருநாள் இந்தநாட்டை ஆளுவோம் எனவும் எடுத்துக்காட்டுவதற்காகவேதான் தமிழரசுக்கட்சி தோன்றியது"

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தொண்டமானாற்றுக்கிளையின் காரியாலயத்தை திறந்துவைத்துப் பேசுகையில் தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஏ. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"சோஷலிஸ அரசாங்கத்தை அறிவுபடைத்த எவரும் பிழையென்று சொல்லமாட்டார்கள். ஆனால் இந்நாட்டில் அமையப்போகும் சோஷலிஸ அரசாங்கம் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கி ஆட்சிசெலுத்தும் அரசாங்கம் என்பதற்காகவேதான் நாம் அதனை எதிர்க்கிறோம்."

இன்றைய சிங்கள ஆட்சியில் தமிழர்க[ள் ...]

யாளர் சோஷலி[ஸம்] கூறிக்கொண்டு [...]தைக் கூறுபோட்[டு ...]கள். இன்றைய [...] ஆட்சியாளர் வட[...] எனப் பேதம்காட்[டி ...] சமயம் என [...] காட்[டி ...] நம்மவ[...] சில[...] கைப்[...] ளாக[...] தமிழ் [...]தையே அழித்து [...]கள். இன்றைய [...] தமிழர் அபிவிருத்[தி ...]லது அக்கறைகா[ட்டு]கிறதா? முந்திய [...]தினால் செய்யப்[பட்ட ...] விருத்தி வேலைக[ளை ...] தடைசெய்தும், [...] வரின் கல்விக[...] கேட்டை ஏ[...] வருகிறார்கள். [...]களின் தீர்ப்பின் [...] சரித்திரம் [...] போகிறது. ம[...] ஒற்றையாட்சியே[...] கொண்டிருக்கும் [...] ஆட்சியில் நாம் [...] இன[...]கவும், [...] மாகவும் வரப்[...] இப்படியான நி[...] இன்று தமிழின[...]றது. எங்கள் [...] பெறுவதற்கு ஒ[...] மாகச் சேர்ந்து [...] என்றோ ஒருநா[ள் ...] இந்த நாட்டில் [...] சிலைநாட்டியே [...]

உடுவில் எம் [...] தர்மலிங்கம் [...] கூறியதாவது:

"தமிழரசுக்கட்[சி ...] மன்றக்கட்சியல்[ல ...] தமிழ்பேசும் ம[க்களின்] வாழ்வுக்காக [...] வரும்கட்சி. தே[ர்தல் ...]லில்மட்டும் உ[...] னிலையில் தோன்[றும் ...] மல்ல, காலத்[...] உங்கள் முன்னி[...] தமிழ்பேசும் ம[க்]கள்பற்றி எடுத்[...] வதுதான் நம[து] கடமையாகும். [...]

# ...வேசமும்

# ...ரும்

எமது சிந்தனைக்குரியவையா கும் 'கல்வித் துறையில் பாரபட்சம் காட்டும் நடவடிக்கைகள் சட்டத்தின் முன் சமத்துவம் அளிக்க மறுப்பதாகும்.' சென்னையில் மாணவர் இருவர் பொறியியல் வைத்தியப் பிரிவுக்கு அனுமதிகோரித் தாக்கல் செய்த வழக்கு பிரசித்திபெற்ற தொன்றாகும். இந்திய உயர் நீதிமன்றம் 'இனகோட்டா' 'பிரதேசகோட்டா' ஆகியவற்றால் பிரஜைகளின் சமத்துவமும் மீறப்பட்டுள்ளது. இதனால் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது எனத் தீர்ப்பளித்தது. எமது பல்கலைக் கழகம் அதன் ஆரம்பத்திலிருந்து இன, மத, மொழி வேறுபாடுகளை இதுவரை தவிர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். எந்த அரசாங்கமானாலும் அதன் அரசியல் நோக்கங்கள், கொள்கைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் எமது பாரம்பரியத்தை அதாவது கல்விபெறும்சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு உதவிசெய்தல் அதன்கடமையாகும். இந்தஉரிமைக்காக ஐரோப்பிய நாடுகள் 6 நூற்றாண்டுகளாகப் போராடின. ஆனால் இந்து. பௌத்த பாரம்பரியத்தின்படி இதற்கு முன்னரே யாருக்குப் போதிக்கலாம், எதைப் போதிக்கலாம், யார்போதிக்கலாம் எவ்வாறு போதிக்கலாம் என்பன குறித்து ஆராய வகுக்கப்பட்டது. (தொடரும்)

க.நேசையா

...ன்றுமே

...ாழவில்லை'

## வேலைகள் விரைவில் ஆரம்பிக்கும்

சங்கானை, புதன்

அண்மையில்வர்த்தகமந்திரியினால் திறந்துவைக்கப்பட்ட வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாச நெசவாலையின் செப்பனிடும் பிரிவுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான இயந்திரங்களைப் பொருத்துவதற்கான ஆலோசனைகளை தற்பொழுது நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர் இந்த வேலைகள் பூர்த்தியானதும் வடபகுதியில் உள்ள சகல மின்தறி நெசவாலைகளினதும் கைத்தறி நெசவாலைகளினதும் உற்பத்தித் துணிகள் இவ்விடத்திலேயே செப்பனிடக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இதன்மூலம் தற்பொழுது வடபகுதியில் மின்தறியில் செய்யப்படும் துணிகள்செப்பனிடுவதற்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் செலவினங்கள் கட்டுப்படுத்தப்படும்,

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து, ஆட்சியும் செலுத்திவந்தனர். அப்படியான இனத்தை இன்றைய ஆட்சியாளர் ஒரு அரசியல் திட்டத்தினால் அழிக்கத் திட்டமிட்டுள்ளனர். உலகில் 36 நாடுகளில் தமிழினம் இருந்துவந்தது. இப்போது 3 நாடுகளில் மாத்திரம் தமிழினம் இருக்கிறது. எந்த நாட்டிலும் சிறுபான்மைஇனத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் தான் அரசியல் திட்டம் அமைகிறது"

ஊர்காவற்றுறை எம் பி திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில், ஓரினம், ஒருமொழி, ஒருமதம் என்ற நிலைக்கு இன்றைய அரசு போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு தமிழ்மக்கள் மத்தியிலும் ஒரு சிலர் ஆதரவு அளித்துவருகிறார் என்றார். திரு. க. துரைரத்தினம்

# விலைவாசி உயர்வுக்கு தனியார் துறையினரே காரணம்

## யாழ். நகரில் கொலன்ன எம். பி.

(கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், வியா.

விலைவாசி உயர்ந்து விட்டதாக இங்கு மட்டுமன்றி தெற்கிலும் குரல் எழுப்புகிறார்கள். விலைவாசி உயர்வுக்கு காரணம், பொருட்கள் விநியோகம் இன்றுவரை தனியார் கையில் இருந்து வருவதுதான் அரசாங்கம் இதனை பொறுப்பேற்றதும் பொருட்களின் விலைகள் குறையும்'

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்த கூட்டத்தில் கொலன்ன எம். பி. திரு. விமலநாயக்கா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு விமலசேன மேலும் கூறியதாவது: சாமன்களை பதுக்குவதிலும் பொருட்களின் விலையை ஏற்றுவதிலும், சிங்கள முதலாளிகளும் தமிழ் முதலாளிகளும் ஒற்றுமையாக தோளோடு தோள் நின்று பணியாற்றுகிறார்கள். இவர்களால் ஒற்றுமைப்பட முடியுமானால், இந்த நாட்டை முன்னேற்றுவதறகாக தமிழ் சிங்கள தொழிலாளர்களும் விவசாயிகளும் ஏன் ஒற்றுமைப்படமுடியாது.

தேர்தல் காலத்தில் என்னை ஒரு தமிழன் என்று, ஐக்கிய தேசியக்கட்சியினர் பிரசாரம் செய்தனர். அப்படியிருந்தும்எனது தொகுதி மக்கள் 7000 மேலதிக வாக்குகளால் என்னை வெற்றி பெறச் செய்தனர். இதிலிருந்து என்ன தெரிகிறது. தமிழனாயிருந்தாலும் சரி, சிங்களவனாக இருந்தாலும் சரி, நாட்டிற்கு உண்மையில் சேவையாற்றக் கூடிய ஒருவனையே மக்கள் தெரிவு செய்வார்கள்.

கல்கிசை எம். பி. திருமதி. விவியன் குணவர்த்தனா கூறியதாவது: இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் மாணவர்களின் வருங்காலத்தை சுபீட்சமடையச் செய்வதற்காக நாம் எவ்வித பாகுபாடுமின்றி ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினாலும் வீண் சுலோகங்களினாலும் எதிர்ப்புக் கூட்டத்தினாலும் இந்த நாட்டிற்கோ அல்லது மக்களுக்கோ எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை

கிரியல்ல எம். பி திரு. நாணயக்காரா மேலும் கூறியதாவது: ஆபிரிக்கா, அரேபிய, போன்ற நாடுகளெல்லாம் பொருளாதாரத் துறையில் எவ்வளவோ முன்னேறி விட்டது. அங்குள்ள மக்கள் எவ்விதபாகுபாடுமன்றி ஒற்றுமையாக நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்க முன்வந்ததினால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இலங்கையில் இப்படியான ஒற்றுமை ஏற்படாத காரணத்தினால்தான பொருளாதார துறையில் நாம் முன்னேறவில்லை.

எமக்குப்பின் சுதந்திரமடைந்த நாடுகள் பல முன்னேற்றமடைந்து விட்டன, ஆனால் நாம் 20 ஆண்டுகளுக்கு முன் சுதந்திரமடைந்தும் இதுவரை முன்னேற்றமடையவில்லை, சுதந்திரமடைந்த பின்னர் கூட அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கும் முதலாளித்துவத்திற்கு அடிமையாக இருந்ததால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இனிமேலாவது இந்நாட்டின் சகல மக்களும் ஒற்றுமைப்பட்டு பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும். அப்படியானால் தான் எமது வருங்கால சந்ததியினர் சுபீட்சமாக வாழமுடியும்.

ஏகாதிபத்திய வாதிகள் தான் எங்களின் யமன். இவர்களை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் ஒற்றுமைப் படவேண்டும்.

கிளிநொச்சி. சாவகச்சேரி ஊர்காவற்றுறையிலுள்ள எனது நண்பர்களை நேற்றுச் சந்தித்தபோது தமிழில் 'எப்படிச் சுகம் ஐயா' என்று கேட்டபோது அவர்கள் சிங்களத்தில் பதில் கூறினார்கள். இப்படியான நிலைமை நாட்டில் ஏற்பட்டால். எங்கள் மத்தியிலுள்ள சிறு சிறு பிரச்னைகளும் தீருவதற்கு வழி பிறக்கும்.

இங்கு எனக்கும் மற்றும் எனது சகாக்களுக்கும் சூட்டப்பட்ட பெருந்தொகையான மாலைகள்போல் வேறு எந்தக் கூட்டத்திலாவது சூட்டப்படவில்லை. இதிலிருந்து தமிழ் மக்கள் எங்களுடன் ஒற்றுமைப்பட்டு இந்த நாட்டை முன்னேற்றத் தயாராகிவிட்டார்கள் என்று தெரிகிறது.

திரு. வி. பொன்னம்பலம் பேசும்போது கூறியதாவது: வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ்வேண்டுமென்று கூறும் வழக்கறிஞர்கள் இன்றும் ஆங்கில உடையில்தான் நீதிமன்றத்திற்குச் செல்கின்றனர். உண்மையில் அவர்களுக்கு தமிழ்மொழியில் பற்று இருந்தால் ஆங்கில உடையை நீக்கி தமிழருக்குரிய தேசிய உடையில் செல்லவேண்டும். இதற்கு நீதிமன்றத்தில் ஏதும் எதிர்ப்பு இருக்காது. தென்பகுதியில் உள்ள பல நீதிமன்றங்களில் சிங்கள வழக்கறிஞர்கள் ஆங்கில உடையை உதறித் தள்ளிவிட்டு தேசிய உடையில்தான் செல்கின்றனர். இந்த நிலை இங்கும் ஏற்படவேண்டும்.

வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடைபெறுவதற்கு தேசிய சபை ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும். சிங்களம் உத்தியோக மொழியாக எப்பவோ ஏற்கப்பட்டுவிட்டது இங்குள்ளசிலர் தமிழ்மொழியையும் உத்தியோக மொழி ஆக்குவோம் என்று கூறுவது ஒரு ஏமாற்றுக்கோஷமாகும்.

4 கோடி மக்கள் வாழும் தமிழ்நாட்டில்கூட மொழிப் பிரச்னைகள்பற்றிய சில விஷயங்கள் தீர்வுகாணப்படாமலிருக்கின்றன. ஆதலால் அதேபோன்ற பிரச்னைகள் இங்கு இருப்பது ஆச்சரியமல்ல. இவற்றைப் பரஸ்பர நல்லெண்ணத்துடன் ஒற்றுமைப்பட்டே நிர்க்க முடியும்.

இந்த அரசாங்கம் விரைவில் வடபகுதியில் பல்கலைக் கழகத்தை நிறுவவிருக்கிறது அதன்பின் கிழக்கு மாகாணத்திலும் பல்கலைக்கழகம் நிறுவப்படும். அரசாங்க மளித்த வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

திரு ஏ விஸ்வநாதன் பேசும்போது கூறியதாவது: கடந்த தேர்தலின் பின் வடக்கில் சமசமாஜக்கட்சியின் பலம் அதிகரித்துவிட்டது. 8 மாத காலம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அவதானித்துவந்த தமிழ்மக்கள் இன்று அரசாங்கத்தை ஆதரிக்க முன்வந்துள்ளார்கள். பெருமளவில் வாலிபர்கள் எங்கள் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

இரத்தினபுரி எம் பி திரு எலவல பேசும்போது கூறியதாவது: இந்த நாட்டுமக்களின் வாழ்வை சிறாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் செய்து வருகிறது. தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் ஒன்று சேர்ந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவேண்டும்,

திரு பாலசிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினார்கள்'

எம் பி செனட்டர் திரு சு நடராசா, மு ஆலாலசுந்தரம், கு சண்முகநாதன், சிவாகிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

# "எமது கட்சிக்கு ஆதரவு தேடநாம் விரும்பவில்லை"

சுழிபுரம், புதன்

'தேர்தலுக்காக இயங்கும் கட்சியல்ல இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி. இது இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமாகும். இதனால்தான் எட்டு மாதங்கள் பொறுத்திருந்து, அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக்கவனித்து, மேலும் பொறுத்திருந்தால் தமிழ் மக்கள் இந்த நாட்டிலிருந்து அழித்து ஒழிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற காரணத்தினால் உண்மை நிலைமையை எடுத்துக்கூறுவதற்காகதமிழ் பகுதிகளில் எமது கட்சிக் கூட்டங்களை நடாத்திவருகின்றோம். யாரையும் குறைகூறவோ, அன்றி எமக்கு செல்வாக்கு திரட்டவோ நாம் பாடுபடவில்லை. இந்தஅரசு பல்வேறு கருமங்களில் எமது இனத்துக்கு பாதகம்செய்து வந்துள்ளது என்பதையும். புதிய அரசியல் திட்டத்தில் தமிழினத்துக்கு திங்கு விளைவிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டவேண்டியது எமது கடமை'' என்று வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக் கருகாமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் கூறினார்.

திரு எஸ் இராஜசேகரம் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். சாவகச்சேரி எம் பி திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் இந்த அரசு எமக்குச் செய்யும் அநீதியை எதிர்த்து நியாயத்துக்காக போராடவேண்டும். என்றார் ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ இரத்தினம் பேசுகையில் தமிழ் மொழி பல்வேறு வகைகளில் அழிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு வருகின்றது என்றும், சில பத்திரிகைகள் எமது செய்திகளை மூடி மறைத்து தேவையற்றவர்களுக்கு வீண் பிரச்சாரம் செய்யும் ஓர் ஈனச் செயலைச் செய்துவருகின்றன என்றும் கூறினார்.

உடுப்பிட்டி எம். பி திரு. ஜெயக்கொடி பேசுகையில் நீதிமன்றங்களில் சிங்கள மொழிஅமுல் செய்வதால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் அதனால் நீதி கிடைக்காமல் போய்விடும் என்ற விளக்கத்தையும் எடுத்துக் கூறினார்

திரு. அ. அமிர்தலிங்கம் பருத்தித்துறை எம், பி திரு க. துரைரத்தினம் பண்டிதர் ப. இராசகுரு எஸ் சபாபதி உட்பட மற்றும்பலர் பேசினர்.

## மகஜர்

அம்பன், புதன்

அம்பன் நெசவு நிலையத்திற்கு நிரந்தர ஆசிரியையின்றி நெசவுத் தொழிலையிலும் இப்பகுதி மாணவிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். எனவே நெசவு ஆசிரியை ஒருவரை நியமித்துத் தருமாறு கோரும் மகஜரை அம்பன் கிராம முன்னேற்றச் சங்கம் குடிசைக் கைத்தொழில்அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

......

## 'வணிகமலர்' குழு

உடுப்பிட்டி. புதன்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தக மாணவர்களின் "வணிகமலர்" சஞ்சிகைக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

திருவாளர்கள் ப. ம. குருகுல், க. மகேந்திரன், ந. தாயாளன், ஜே ஜெயக்குமார், எம். சிவலிங்கம் செல்வி. ஜெயந்தி செல்லராசா

......

## சுதந்திரதினத்தை பகிஷ்கரிக்கமுடிவு

யாழ்ப்பாணம், வியா.

சுதந்திர தினத்தை பகிஷ்கரிப்பதென்றும், பெப்ரவரி 4-ம் தேதியை துக்கதினமாக அனுஷ்டிப்பதென்றும் தமிழர் சுயாட்சிக்கழகம் தீர்மானித்துள்ளது.

அந்நிய ஏகாதிபத்திய வாதிகள், தமிழ் மன்னன் சங்கிலியனை கைது செய்த தினத்தை ஜூன்மாதம் எழுச்சி தினமாக கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் சுயாட்சிக்கழக மகாநாட்டை, ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்துமதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வவுனியா, மன்னார் கிழக்குமாகாணம், மற்றும் பகுதிகளிலிருந்து மகாநாட்டிற்கு வரும், பிரதிநிதிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(கு வி ம)

......

## சின்னத்துரை வெற்றிக்கிண்ணப் போட்டி

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சி விளையாட்டுச் சபையால் நடாத்தப்பட்ட சின்னத்துரை வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் வெள்ளிக்கிழமையன்று அருணோதயா விளையாட்டுக்கழகமும். நீர்ப்பாசன இலாகாவினரும் மோதினர்.

திரு. கே. குழந்தைவேல் தலைமையில் ஜெற்றிக்கோ மைதானத்தில் போட்டி ஆரம்பமானது. திரு. எஸ், எஸ் சபாரெத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிந்ததைத் தொடர்ந்து விளையாட்டுக் கழகங்களிடையே பரபரப் பேற்பட்டது. வெற்றிக்கிண்ணம் தமக்கே என அருணோதயா கோரியது. காரணம் 21 சுற்றுப்போட்டிகளிலும் தாமே கூடிய கோல்கள் பெற்றதாம்.

இக்கட்டான கட்டத்தைச் சமாளிக்க கிளிநொச்சி விளையாட்டுச்சபை உடனடியாகக்கூடி அரையாண்டு அருணோதயாவுக்கும் மீதி அரையாண்டு நீர்ப்பாசன இலாகாவுக்கும் வெற்றிக்கிண்ணம் எனத் தீர்ப்பு வழங்கியது.

# "பணத்தைப் பதுக்காதீர்"
-- டாக்டர் என். எம்.

சுழிபுரம், புதன்
"பாடுபட்டுத்தேடிய பணத்தைப் பதுக்கி வைக்காதீர்கள். வங்கியில் போடுங்கள் நாட்டுக்கு உதவுங்கள் இன்று சேமிப்புப் பணத்துக்கு நல்ல வட்டி கொடுக்கப்படுகின்றது. யப்பான் நாட்டு மக்கள் தமது உழைப்பில் 40 வீதத்தை நாட்டின் நலன் கருதிச் சேமிப்பு செய்கின்றனர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் சுழிபுரம் சமசமாஜக் கட்சி வாலிப முன்னணியினரால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு பேசிய நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா மேற்கண்டவாறு கூறினர்.

அமைச்சர் மேலும் பேசியதாவது: "தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களுடன் யு என் பி தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் பலமற்று இருந்ததற்குக் காரணம் மக்களிடையே ஒற்றுமை ஏற்படாமல் தலைவர்களிடையே மட்டும் ஒற்றுமை ஏற்பட்டமைதான். ஒற்றுமை மக்களிடையே ஏற்படவேண்டும். அது அதிகநன்மையைக் கோடுக்கும் ஒன்றுபட்டு எமது நாட்டைக் காப்போம்."

"வடபகுதியிலுள்ள மூன்று தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளும் எமது நிலைமையை நன்கு விளங்கி ஆதரவுகொடுத்துவருகின்றனர். புதிய பாதையில் நாம் போய்க்கொண்டு இருக்கின்றோம். மக்கள் அரசாங்கத்தின் உதயம் பொதுமக்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது"

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு ஆ தியாகராசா பேசுகையில் அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கும்தமிழ்க் காங்கிரஸ் எம் பிக்கள் மூவரின் பூரண ஆதரவும் கிடைக்குமென உறுதியளித்தார்.

டாக்டர் என். வி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற வ்வைபவத்தில் கிரியல்ல எம் பி திரு வாசுதேவ நாணயக்காரா உட்பட மற்றும் பலர் பேசினர்.

## திருட்டு

மாவிட்டபுரம், புதன்
காங்கேசன்துறைபிரதான வீதியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் திருட்டு நடைபெற்றுள்ளது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் கடையின் ஓட்டைப்பிரித்து உள்ளே இறங்கி மேசை லாச்சியில் இருந்த பணத்தைத் திருடியதாகவும் அடுத்த லாச்சியில் இருந்த பெருந்தொகையான பணம் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இது சம்பந்தமாககடைச் சொந்தக்காரரான எஸ் எஸ் வி சந்திரன் காங்கேசன் துறைப்பொலிசில் புகார் செய்துள்ளார்

புலன் விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் சிலரை விசாரணைக்குட்படுத்தியதுடன் கைரேகை நிபுணர்களை அழைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

## ஒரு வருடம் எதிர்ப்பில்லையாம்

மாவிட்டபுரம், புதன்
"காங்கேசன்துறைப் பட்டினசபையில் எதிர்க்கட்சி ஒன்று இல்லையெனும் வகையில் கடந்த ஒருவருடத்திலும் நாம் கொண்டு வந்த பிரேரணைகள் யாவும் ஏகமனதாகவே நிறைவேறியுள்ளன" என்று காங்கேசன்துறைப் பட்டினசபை முன்னாள் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் கூறினார்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு இ. குருசாமிக்கு அளித்த வரவேற்பின் திரு. ஜெயபாலசிங்கம் மேலும் பேசுகையில், தாம் பதவி வகித்த ஒரு வருடத்திலும் பாகுபாடின்றிச் சகல வட்டாரங்களுக்கும் ஒரேவிதமாகச் செயலாற்றியதால் தான் பிரேரணைகள் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டன என்றும் அதேபோல புதிய தலைவரும் செயல்படுவாரென நம்புவதாகவும் கூறினர். புதிய தலைவர் இ. குருசாமி பேசுகையில், தாம் பாரபட்சமின்றிச் செயலாற்றிக் கிராமத்தை முன்னேற்ற முயல்வதாகக் கூறினர்.

மறறும் உபதலைவர் திரு. ஐ பேரின்பம், திரு. எஸ் நாகரத்தினம், திரு. வி. இரத்தினராசா உட்படப் பலர் பேசினர்.

## விவசாய அதிகாரி கருத்து

உடுப்பிட்டி, புதன்
வடபகுதியில் பல ஏக்கர் நெல்வயல்களை நாசமாக்கி வரும் எரிபந்தமென்னும் பயங்கர பயிர்த் தொற்று நோயைக் ககமின் அல்லது பசுபின் என்னும் பூஷணநாசினி மூலம் ஒழித்துக் கட்ட முடியுமென்று தலைமைப்பீட விவசாயபோதனாசிரியர் திரு. கே. குமாரசாமி தெரிவித்தார்.

இப்பயிர் நோயால் அதிகம் பாதிக்கப்படாமலிருப்பது வடமராட்சிப் பகுதி நெல்வயல்களே என்றும் வடமராட்சி மண் மிளகாய் உற்பத்திக்கு உகந்ததாக விளங்குகிற தென்றும் அவர் சொன்னார்.

## 108-வது வயதில் மரணம்

அம்பன், புதன்
அம்பனைச் சேர்ந்த பூதன் மனைவி சிதேவி தனது 108வது வயதில் மரணமெய்தியுள்ளார். இவரது கணவர் இவரது 70-வது வயதிலே காலமாகிவிட்டாராம் இவர் இறக்கும்பொழுதும் திடகாத்திரமுடனேயே இருந்தார்

## கருத்தரங்கு

முசலி, புதன்
மன்னார்மாவட்ட தேசிய சேமிப்பு கருத்தரங்கு அடுத்த மாதம் நடுப்பகுதியில் மன்னார் அல் அஸார் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதனல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இந்த தேசிய சேமிப்பு கருத்தரங்குக்கு தேசிய சேமிப்பு இலாகா ஆணையாளர் திரு. என். பி ஜெகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## பொலிஸ் கைப்பற்றியது

இமையாணன், புதன்
இரகசியத் தகவலைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை பொலிசார், சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த சாமான்களைக்கடத்தலில் ஈடுபட்டிருந்த சமயம் வல்வெட்டித்துறையில் கைப்பற்றினர்

பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. எல் சிறிவர்த்தன தலைமையிலான பொலிஸ் கோஷ்டி வல்வெட்டித்துறையில் கைப்பற்றிய இப்பொருட்களில் செவின் சில், பீன்எண்ணை, நைலோன் நூல் போன்றவை இருந்தன.

இச்சாமான்களைக் கைப்பற்றிய பொலிசார் சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைதுசெய்து வல்வெட்டித்துறை சுங்க இலாகாவினரிடம் ஒப்படைத்தனர்.

## சிலேற் பென்ஸில் விலை குறைகிறது

கோட்டை, புதன்
சிலேற் பென்சிலின் விலையைஅரசாங்கம் குறைத்துள்ளது.

முன்பு 10 சதம் விற்ற சிலேற் பென்ஸில் தற்போது 5 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு கே பி திஸநாயக்கா அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் இவ்விலை குறைப்பை வெளியிட்டுள்ளார்.


பகலில் கொளுத்தும் வெய்யிலிலும்
இரவில் கடுங் குளிரிலும் பாடுபட்டு
உழைக்கும் உங்களுக்கு இதோ!



கணப்பொழுதில் செயலாற்றும்,
புது முறை

அசல்
(ரோஜாவர்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ.எஸ்.சீ
வில்லைகள்

விரிவான விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள உடனுக்குடன் மூவ் வழியில் செயலாற்றும் புது முறை வின்சென்ட் ஏஎஸ்சி இளஞ் சிவப்பு வில்லைகள் தலையிடி, நோவு, வலி, காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு உடனடியாகவும் நிலையாகவும் நிவாரணந் தந்து, ஊக்கமும் உற்சாகமும் உடல் நலமும் உடையவர்களான உணர்வை மீட்டுத் தருகின்றன. வலி, காய்ச்சல் என்பன நிலைத்து நின்றால் உங்கள் வைத்தியரைக் காணுங்கள்.




உட்கொள்ளுங்கள்
மூவ் வழிச்
செயற்பாடுடைய
வின்சென்ட்
இளஞ் சிவப்பு வில்லைகள் அவை

விரைவில் செயலாற்றுவன, பாதுகாப்பானவை, நிச்சய குணமளிப்பன.

# கலைக்களஞ்சியம் கந்தையா

தமிழ், சமஸ்கிருதம், சைவம் வளர்த்து, வேதமும் வேள்வியும், மெய்மையும் பொய்மையுமுணர்ந்த பண்டித பரம்பரையில் தோன்றி நீர்வேலி கிராமத்தின் அணிகலனாக, சிறுடனும், சிறப்புடனும், பேருடனும் புகழுடனும் வாழ்ந்து அண்மையில் அமரத்துவமடைந்த பெருமகனாரே உயர்திரு கதிரவேலு கந்தையா ஆசிரியர்.

கம்பீரமான அழகியதோற்றம்; எலுமிச்சம் பழநிறம்; என்பதும் ஐம்பது சென்றும் குழந்தை உள்ளம்; மாசற்ற போக்கு; எதற்கும் புன் முறுவல், பலவகைத் துறையில் பாண்டித்தியம், பார்ப்பவர் கேட்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் பக்குவம் நிறைந்த உரையாடல், இலட்சிய ஆசிரியரத்தினம், சிறந்த முத்தாளன் பரந்த சமதர்மசிந்தனையாளன் இத்தனைக்கும் உரித்துள்ள இப்பெரியார் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமும்கூட!

உலக வரலாறு சர்வதேசிய விவகாரம், அரசியல் ஆங்கில இலக்கியம் ஆகிய துறைகளில் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாகக் காட்சியளித்த இப்பேராசான் லத்தின், ருஷியன் போன்ற மொழிகளிலும் ஆற்றலுடையவராய் இருந்தார். எவ்விடயத்தையும் நுணுகி ஆராய்ந்து தெளிவுற எழுதும் ஆற்றல் இவருக்குரிய தனிப்பெருங் கொடை. 1942-1952க்கிடையேயுள்ள காலத்தில் வெளிவந்த ஆங்கிலவார ஏடாகிய 'கேசரி'க்கு ஆசிரியராக இருந்த ஸ்ரீமான் ஹன்டி பேரின்பநாயகத்துக்கு துணையாசிரியராகத் தேர்ந்தெடுத்த பெருமையும் இவரைச் சாரும். தனக்கே உரிய நடையில் ஹாஸ்யமாகப் பேசவும் எழுதவும் இவருக்கு இருந்தஆற்றல் வியத்தகு ஒன்றாகும்.

இன்று எல்லோருமே திடீர் திடீரென தம்மைத் தாமே பெருமையுடன் மார்க்சிய வாதிகள், சமதர்ம பக்தர்கள் என அழைப்பது போல் அல்லாமல் எம்மதிப்பிற்குரிய அமரர் கந்தையா அவர்கள் இளமையில் இருந்தே ஓர் உண்மையான அசைக்கமுடியாத மார்க்சிய சமதர்மபக்தராக இருந்ததுடன் அத்துறையில் விசேட பாண்டித்தியமும் பெற்றிருந்தார்.

ஆரம்பக் கல்வியை நீர்வேலியிலும் கோப்பாயிலும் முடித்துக்கொண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பின்னர் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியிலும் கற்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

இவரே எமது கிராமத்தின் முதலாவது லண்டன் பல்கலைக்கழக பட்டதாரி என்ற சிறப்புக்கும் உரியவராவார்.

இன்று குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் பொதுவாக அனைத்திலங்கையிலும் தலைசிறந்த கல்விமான்கள், அறிஞர்கள் என்று மதிக்கப்படும் பெரியார்கள் வரிசையிலுள்ள ஸ்ரீமான் ஹன்டி பேரின்பநாயகம் போன்றவரின் ஆக்க, ஊக்க சக்தியின் பிரதிபலிப்பே எம் மாண்புமிக்க அமரர் கந்தையா ஆவர்.

ஆசிரியர் தொழிலில் பிரவேசித்தஇவர் முதலில்அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியிலும் பின்னர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும் சிரேஷ்ட ஆங்கில மொழி, இலக்கியம் சரித்திரம் ஆகிய பாடங்களில் பேராசானாக யாவரும் இவரைப் பண்டிதனோ அல்ல பாவலனோ என்று வியக்கும் வகையில் அழகு, அன்பு, அமைதி, அறிவு ஆகிய ஆசிரியனுக்குரிய இலட்சணங்களுடன் ஓய்வு பெறும்வரை பணியாற்றி பெருமையடைந்தார்.

## தட்டுப்பாடு

அம்பன், புதன்

வடபகுதியிலுள்ள பெரும்பாலான தபாற் கந்தோர்களில் முத்திரையுடன்கூடிய என்வலப்பு பலமாதங்களாக தட்டுப்பாடாகவேஇருந்து வருகின்றது. தபாற்கந்தோர் அதிபர்கள் மேலிடத்திற்கு அறிவித்தும் இதுவரையும் அனுப்பப்படவில்லையாம்.

## இன்றைய பலன்

தை மாதம் 15-ந் திகதி

(28-1-71)

மேஷம்: கடந்தகால நினைவுகள் உங்களுக்கு கவலையைத்தரலாம் விவசாயிகளாயின் இன்று ஒருசோதனை காலமாகும்.

ரிஷபம்: நினைத்ததைமுடிப்பதில் இன்று வெற்றிகாண்பீர்கள். தொழில்துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

மிதுனம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய்குறை கேட்கநேரிடலாம்.

கடகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்ட நாள்பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

சிம்மம்: சிந்தையில் குழப்ப நிலை தோன்றக் கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத்தரலாம். தெய்வ நம்பிக்கைநன்று.

கன்னி: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும்.

துலாம்: திட்டமிட்டபடியே வாழ்க்கை நடக்கும். புதிய உறவுமுறைகளுக்கும் இடமுண்டு. இன்று பயனுள்ளதினம்.

விருச்சிகம்: பணநிலைமை ஸ்திரமாக இருக்கும் புதிய வழிகளில் பொருள் வருவதற்கு இடமுண்டு.

தனுசு: ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக் கொள்ளவும். பூமிப் பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரலாம்.

மகரம்: எதிலும் தயக்க நிலை ஏற்படும். நண்பர்களும்குறை கூறுவார்கள். பொருளாதாரத்துறையில் மந்த நிலைதென்படுகின்றது.

கும்பம்: துண்டிக்கப்பட்ட தொடர்புமீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு. சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

மீனம்: இதயத்தில் எரிமலை குமுறும். உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும் பெரியவர்களுடன் உறவு பெலப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

சுருங்கக்கூறின் உயர்ந்த பண்பாடு, கலாச்சாரம் வறண்டுவற்றியபாலை நிலமாகக் காட்சியளித்தபோது பாலையில் தோன்றிய சுந்தரைபோல், எம்மத்தியில் பிறந்து வளர்ந்துபண்பாடும் கலாச்சாரமுமே உருவெடுத்தாற் போல் வளர்ந்துவாழ்ந்து, தொண்டாற்றி எமக்கெல்லாம் ஓர் அறிவுச் சுரங்கமாக, கலைப்பொக்கிஷமாக அருமைமணிதனை காட்சியளித்தவர் கந்தையா மாஸ்டர்.

எம்மெல்லோருக்கும் அன்பனும் பண்புமிக்க பெரியனும், பண்டிதனும் பாவலனும், கலைக்களஞ்சியமாம் கந்தையா இறைவன் இணையடியில்இன்புற்று வாழ்கவென இறைஞ்சுகின்றேம். நேற்று இவரது சிரார்த்ததினமாகும்.

—மாணவன்

# யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரும் ஆசிரியர்கள் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

பிற இடங்களிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் பட்டியலை ஆசிரியர் இடமாற்றசபை அறிவித்துள்ளது. இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்களுக்கு பிரயாணச்செலவு கொடுக்கப்பட மாட்டாது எனவும் அறிவித்துள்ளது. இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் விபரம் வருமாறு:-

திரு எம். சிங்கராயர் மன்னார் அரசாங்க முஸ்லீம் வித்தியாசாலை கொபெகளி- சங்கானை மகாவித்தியாலயம்.

திருமதி எம் குணரத்தினம் ஆர். சி பெண்கள் பாடசாலை சிலாபம் - அச்சுவேலி மகாவித்தியாலயம்.

திரு. கே இட்டினர் ஜி ரி எம் எஸ் முண்டல் - ஆவரங்கால் எம் எம் ரி எம் எஸ்

திரு. என் கனகரத்தினம் குளிசசகுலம், உமர் மகா வித்தியாலயம் பட்டுலோயா வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

திரு எஸ் வைகுந்தசாமி செண். பொஸ்கோ வித்தியாசாலை அட்டன்- அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை,

திரு என் விவேகானந்தர் யாகலாரவா வித்தியாசாலை மெலிமடை - அல்வாய் தெற்கு அம்பாள் வித்தியாசாலை

திரு எஸ் வேலாயுதபிள்ளை மெதடிஸ்ற் வித்தியாசாலை கந்தப்பொல - கரம்பைக்குறுச்சி ஜி ரி எம் எஸ்.

திரு எஸ் செல்லப்பாசெண். லூயிஸ் வித்தியாசாலை இரத்தினபுரி - வசாவிளான் மகா வித்தியாலயம்.

திரு கே துரைரத்தினம் பேசாலை மகாவித்தியாலயம் பேசாலை - பன்னாலை ஸ்ரீ கனகசபை வித்தியாசாலை.

திருஏ ஏ கிறிஸ்தோபர்செண் ஜோன்பொஸ்கோ வித்தியாசாலை அட்டன்- நாகர்கோவில் ஆர் சி ரி எம் எஸ்.

திருமதி என் நடராசா உடப்பு ஜி ரி எம் எஸ் உடப்பு- நல்லூர் சி சி தமிழ் பெண்கள் வித்தியாசாலை,

திரு கே நடராசா உடப்பு ஜி ரி எம் எஸ் உடப்பு-செங்குந்தா இந்துக்கல்லூரி.

திரு கே கந்தையா செண். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அட்டன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

திரு கே சாந்தலிங்கம் ஹைலண்ட்ஸ் வித்தியாசாலை அட்டன் - நயினாதீவு ஸ்ரீ கணேஸ்வர வித்தியாலசாலை.

திரு கே நடராசா தமிழ் மாவித்தியாலயம் பூண்டுலோயா - இணுவில் சைவ மகாஜனா,

திரு என் குணநாயகம் ஹைலண்ட்ஸ் வித்தியாசாலை அட்டன்- (மன்னார் பிரிவில் ஒருபாடசாலைக்கு)

திரு என் முத்துசாமி ஹைலண்ட்ஸ் வித்தியாசாலை அட்டன் - கரம்பைக்குறிச்சி ரி எம் எஸ்.

திரு கே பாலசிங்கம் செண்ற் ஜோன் வித்தியாசாலை இறக்குவானை - நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

திரு கே கனகசபைபுதுக்குடியிருப்பு சி சி ரி எம் எஸ். புதுக்குடியிருப்பு - அருணோதயக்கல்லூரி.

திரு பி சங்கரப்பிள்ளை விவேகானந்தா ரி எம் எஸ். அனுராதபுரம்-உடுத்துறை மகா வித்தியாலயம்.

திருமதி பி வல்லிபுரம் விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு-13-யாழ்டன் கல்லூரி காரைநகர்.

திரு எம் பஸ்தியாம்பிள்ளை தலைமன்னார் பியர் ஜி ரி எம் எஸ் தலைமன்னார் - சித்தங்கேணி கணேஷ் வித்தியாலயம்.

திரு வி திருநாவுக்கரசு இவுலக்கொட ஜி எம் எம் எஸ்கம்பிரிசஸ்லீவா-மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை

திருமதி எஸ் சிதம்பரப்பிள்ளை குட்செப்பேர்ட் கொன் வென்ற் கொழும்பு-13- மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தியாசாலை.

திரு எஸ் கந்தசாமி மாவிலங்கேணி ஆர் சி ரி பாடசாலை மூதூர் - ஆவரங்கால் எம் எம் ரி எம் எஸ்.

திரு என் கந்தசாமி சிங்கள தமிழ் மகாவித்தியாலயம் நாவுஓயா. - சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை

திருமதி எம் சவரியம்மா வவனிக்குளம்,2-ம்பகுதி ஜி. ரி எம் எஸ். - நாவாந்துறை ஆர் சி ரி எம் எஸ்,

திரு எஸ் தர்மலிங்கம் இராமியன்குளம் ஜி ரி எம் எஸ் நட்டன் கண்டல் - சிறுப்பிட்டி ஜி ரி எம் எஸ்

திரு எஸ் வேதாரணியம் விகண்டி தமிழ் வித்தியாசாலை - வேலம்பொக்கடி ஜி ரி எம் எஸ்

திரு கே பஞ்சரத்தினம் வெலிமடை கெற்தெளிப்பொத்த வித்தியாசாலை- சங்கானை மகாவித்தியாலயம்.

திரு சி தேவரட்ணம் பெரிய பண்டிவிரிச்சான் ஜி ரி எம் எஸ் மண்டுகோவில் - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை.

திரு ரி செல்வரத்தினம் கொட்டலாவலபுர ஜி ரி எம் எஸ். இரத்மலானை - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.

செல்வி எஸ் ஏ கொடுதூர் நாவற்குளம் ஆர் சி ரி எம் எஸ். - இளவாலை கொன்வென்ற் மகாவித்தியாலயம்.

திருமதி ப கந்தசாமி கிறீன் ஸ்றீற் ஜி ரி எம் ஆரம்ப பாடசாலை, கொழும்பு-13- கரவெட்டி விக்னேஸ்வரா

திரு கே கந்தசாமி சென்ற் செபஸ்தியன் மகாவித்தியாலயம் - திக்கம் சித்திவிநாயகர் வித்தியாசாலை,

(தொடரும்)

## முதல் பிரிவில் சித்தி

அம்பன், புதன்

குண்டசாலை கமத்தொழில் போதனா வகுப்பு இறுதித் தேர்வில் குடத்தனையைச் சேர்ந்த துரையப்பா ஞானதேவி முதற் பிரிவில் விசேட சித்திகளுடன் சித்தியெய்தியுள்ளார். இவர் குடத்தனை கிராமசபை முதல்வரின் புதல்வியாவார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 28—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6–15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை,

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நிலையஒலிப்பதிவு.

இரவு 6-15பாமாலை, 7-00 ஞானமஞ்சரி, 7-15 வீணை, 7-45 சிறுகதை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம்' 10, நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## மாணவருக்கு திடகாத்திரம் அவசியம்

முசலி புதன்

"உலகத்தில் காணப்படும் தொழில்களில் ஆசிரியத் தொழிலே மிகவும் புனிதமானது இத்தொழில் மட்டும்தான் ஒரு சமுதாயத்தின் வருங்கால சந்ததியினரை முன்னேற்றலாம் என முருங்கன்பகுதி வட்டார வித்தியாதிகாரி திரு. கே ஈஸ்வரபாதம் தமது பகுதி பாடசாலைகளுக்கிடையே விளையாட்டுப் போட்டி ஒழுங்கு செய்யக்கூட்டிய கூட்டத்தில் கூறினார்: இக் கூட்டம் முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அவர் மேலும் கூறியதாது:-

ஒரு ஆசிரியன் தான் கல்வி போதிக்கின்ற பாடசாலையில் ஒருமாணவனின் கல்வியறிவைமட்டும்கவனித்தால் அந்த மாணவன் ஒருவிவேகசாலியாக வரமுடியாது. திடகாத்திரமான மாணவனிலேயே தாம் சிறந்த கல்வியறிவை எதிர்பார்க்க முடியும் எனவே ஒரு ஆசிரியன் தான் கல்வி போதிக்கின்ற பாடசாலையில் விளையாட்டு பகுதியையும் முன்னேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

## சாவகச்சேரி சந்தையில்...

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரிச் சந்தையில் வழக்கத்துக்குமாறாக வியாபாரிகள் வெண்காயத்தை நேற்று நிறுத்திவிற்றனர். போயாதினமான நேற்று நடைபெற்ற சந்தை விற்பனையில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியின் திடீர் பரிசோதனையில் மாட்டிக்கொண்ட பல வியாபாரிகளும் கொத்தால் அளக்கும் வழக்கத்திற்கு மாறாக வெண்காயத்தை நிறுத்து விற்கவேண்டியேற் பட்டது. 1றாத்தல் வெண்காயத்தை அவர்கள் 31 சதமாக விற்றனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஆர். சண்முகலிங்கத்தைப்பாராட்டியபடி பாவனையாளர் மகிழ்ச்சியுடன் பெருமளவில் வெண்காயத்தை வாங்கிச் சென்றனர்.

## கீதாஞ்சலிக்குப் பாராட்டு

வெள்ளவத்தை, புதன்

"செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரையின் நாட்டியத் திறமை ஈழமக்கள் அனைவரும் பெருமைப்படத்தக்க தொன்றாகும். சமீபத்தில் தமிழகத்தில் பரதநாட்டியமாடிய செல்வி கீதாஞ்சலிக்கு சென்னை நுண்கலைச் சங்கம் தங்கப்பதக்கம் கொடுத்துக் கௌரவித்தது. இது ஈழத்திற்குப் பெருமையாகும்.'

எனஇராணிவழக்குரைஞர் திரு. செ இரங்நாதன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற செல்வி கீதாஞ்சலி சிவாஜி துரையின் பரதநாட்டியக் கச்சேரிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

இளம் தமிழர் முன்னேற்ற மன்றத்தினரின் கண்காட்சி நிதிக்காக நடைபெற்ற இக்கலை நிகழ்ச்சியின் போது முன்னாள் பிரதம நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அதிதியாகக்கலந்துகொண்டு செல்வி கீதாஞ்சலியைப் பாராட்டினார்.

வடபகுதியில்

# கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்படுமாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலையொன்றையும் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றையும் அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கைத்தொழில் அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு கூடிய விரைவில் விஜயஞ் செய்யவிருக்கிறாரென்றும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் லங்கா சமசமாஜக் கட்சிக்கிளை வருடாந்த மகாநாடு திரு சு. இராஜநாயகத்தின் தலைமையில் நடைபெற்றது.

நிதிஅமைச்சர் தொடர்ந்து பேசியபோது தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் நல்ல விவசாயிகள். இன்று மிளகாயின் விலை அளவுக்கு மீறியிருப்பதனால் வடபகுதியில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டு சுய தேவையை பூர்த்தி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும்.

வடக்குப் பகுதியினர் நமது கொள்கைகளை புறக்கணித்தாலும் நாம் உங்களுக்கு நேசரக்கரம்கொடுக்க வந்துள்ளோம்.

சகல பிரச்னைக்கும் அடிப்படையாக அமைவது பொருளாதாரப் பிரச்னையே இதற்கு தீர்வுகண்டால் யாவும் சுமுகமாகத் தீர்ந்துவிடும்.

இரத்தினபுரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு நந்தா எலவெல பேசும்போது குறிப்பிட்டவை வருமாறு:

வறிய மக்களின் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அதை ஏற்படுத்துவதற்கு சமதர்மம் ஒன்றே வழியாகும்

விவியன் குணவர்த்தன பேசும்போது குறிப்பிட்டவை

சீதனப் பிரச்னை இங்கு மட்டுமல்ல தென்பகுதியிலுமுண்டு, இப் பிரச்னையை தீர்ப்பதற்கு நவீன சோசலிச சமுதாயத்தை உருவாக்கவேண்டும்

கிரியல்ல எம் பி திரு நாணயக்கார பேசுகையில் குறிப்பிட்டவை

வடக்கு தெற்கு ஆகிய இருபகுதி மக்களும் ஒன்றுபட்டு நமது கலாச்சாரப் பெருமைகளை பாதுகாக்க வேண்டும். கொலனாவை எம் பியும் பேசினார். யாழ் மாநகரசபை மண்டபத்திலிருந்து ஊர்வலமாக பரவரும் முற்றவெளி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

(கு வி ம)

— —

## தொழிற் சங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

பசவலைப பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கி தொழிலுக்கு வசதி செய்துதரவேண்டுமென்று இலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கத்தினர் நிதிஅமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் வடமராட்சி சலவைத் தொழிலாளர் சங்கத்தினரும் கிராமப்புற சங்கங்களின் பிரதிநிதிகளும் நேற்று யாழ்ப்பாணம் புளுறியன் விடுதியில் அமைச்சரை சந்தித்துதமது குறைகளை விளக்கினர்.

## ‘தமிழர் சுயாட்சி மூலமே உரிமை பெறலாம்’

— மூன்னாள் தீவுப்பகுதி எம். பி.

சுழிபுரம், செவ்வாய்

இந்த நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தமக்கென சுயாட்சியை நிறுவுவதன் மூலமே தமது எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். போத்துக்கீசர் முதல் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிவரை இந்நாட்டில் சிங்கள தமிழ்மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்று எமது இனம் சகலவழியிலும் நீதியற்ற நிலையில் புறக்கணிக்கப்படுகின்றது.

இவ்வாறு தீவுப் பகுதி முன்னாள் எம் பி திரு வ நவரத்தினம் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் தமிழரின் எதிர்காலம்' என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கழகத் தலைவர் விக்கினேஸ்வரன் கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

திரு நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பிறப்பால் தமிழர் என்ற காரணத்துக்காக எத்தனையோ கஷ்டங்களை இந்த நாட்டுத் தமிழ் மக்கள் அநுபவிக்க வேண்டியுள்ளது. பெரும் உத்தியோகங்கள் பறிக்கப்பட்டு விட்டன. வெளியிடங்களுக்குச் செல்லும் கோஷ்டியில் திறமையிருந்தும் தமிழர் புறக்கணிக்கப்படுகின்றனர், சர்வகலாசாலைப் படிப்பில் புள்ளி வேறுபாடுகள், இப்படிப்பல வேறு வகையான பெரும் அநீதிகள் நடைபெறுகின்றன. சோஷலிசத்திற்கு நாம் எதிரிகள் அல்ல.

கழகச் செயலாளர் இ. செல்லத்துரை நன்றி தெரிவித்துப் பேசினார்'

## கனடா ரூபா 2 கோடி 60 லட்சம் கடனுதவி

கோட்டை, புதன்

கனடா 2கோடி 60 லட்சம் ரூபாவை இலங்கைக்கு கடனாக வழங்கவிருக்கிறது. இதற்கான ஒப்பந்தமொன்றில் நேற்று மாலை கனடாப் பிரதமர் திரு ரூடோவும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கைச்சாத்திட்டனர்.

50 வருட வட்டியில்லாக் கடனாக இத் தொகையை கனடா அரசுவழங்குகிறது. தேவையாயின்மேலும் பத்து வருட காலத்துக்கு இந்தக் கடன் எல்லையை நீடிக்கலாம் என்றும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி கொலிஜ் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

உகண்டா

## ஜனாதிபதிக்கு தன்ஸானியா அடைக்கலம்

லண்டன், ஜன 26

திடீர் புரட்சிக்குள்ளாகியுள்ள உகண்டாவின் ஜனாதிபதி மில்டன் ஒபட்டேவுக்கு தன்ஸானியா நாட்டில் அரசியல் அடைக்கலம் அளிக்கப்பட்டுள்ளது.

திடீர் புரட்சிமூலம் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிய பின்னர் அங்கு மாமூல் நிலைமை நிலவுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் பீரங்கி ஓசைகள் வானைப் பிளப்பதாக செய்திகள் கூறுகின்றன, ஜனாதிபதி ஒபட்டேவின் புகைப்படங்களை இந்நாட்டு மக்கள் வீதிவழியே கிழித்தெறிவதாகவும் புரட்சியில் 70 பேர்வரை மாண்டுள்ளதாகவும் செய்திகள் கிடைத்தன.

(முன்னைய செய்தி 3-ம் பக்கம்பார்க்க)

தமிழ்நாடு

## காங்கிரஸ் விபரம் வெள்ளியன்று வெளியாகும்

சென்னை ஜன. 26

தமிழ்நாட்டில் ஜகஜீவன் ராம் தலைமையிலான காங்கிரஸ் கட்சி போட்டியிடும் தொகுதிகளின் விபரம் வருகிற வெள்ளிக்கிழமைவெளியிடப்படும் என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஸி, சுப்பிரமணியம் இன்று தெரிவித்தார்,

நாம் கோயம்புத்தூர்த் தொகுதியில் போட்டியிடுவது நிச்சயம் என்றும் திரு சுப்பிரமணியம் கூறினார்,

— —

## பாரத குடியரசு தினவிழா

புதுடில்லி, ஜன 25

பாரத 22-வது குடியரசுத் தினம் நாடு பூராவும் இன்று கொண்டாடப்பட்டது. ராஜ்யங்களிலும் தலைநகரிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் லட்சக்கணக்கானோர் கலந்துகொண்டனர், 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட மாபெரும் அணிவகுப்பை ராஷ்டிரபதி திரு வி வி கிரி ஏற்றுக்கொண்டபோது தன்ஸானியா அதிபரும் ராஷ்டிரபதிக்கு அருகில் இருந்தார். இவ்வாண்டு பாரத ரத்ன விருது எவருக்கும் வழங்கப்படவில்லை

தமிழ்நாட்டில் திரு முசிரி சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீமதி டி கே பட்டம்பாள், திரு பாலக்காடு மணிஐயர், திரு என் இராமசாமி, நாமக்கல்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, திரு சாம்பமூர்த்தி ஆகியவர்களுக்கு பதமபூஷன் பட்டமும் பாலமுரளிகிருஷ்ணா, ஔவை டி கே சண்முகம், கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு, எஸ் கிருஷ்ணன், விஸ்வநாத [கிரிக்கெட்] வெங்கட்ரமணி, மாத்ருபூமி, பி கந்தசாமி ஆகியவர்களுக்கு பத்மஸ்ரீ விருதுகளும் வழங்கப்பட்டன,

7 பேர் உதைபந்தாட்டம்

# பொலிஸ்—மாநகரசபை இன்று இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ் விளையாட்டரங்கில் நடைபெறுகின்றது.

இந்த இறுதிப் போட்டியில், யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டியும், யாழ்ப்பாண மாநகரசபை 'ஏ' பிரிவுச் கோஷ்டியும் மோதிக் கொள்கின்றன.

### பொலிஸ் கோஷ்டி

யாழ். பொலிஸ் கோஷ்டிக்கு. வீரர் என். முனசிங்கா தலைமைதாங்குகின்றார். இக் கோஷ்டியில், யாழ். தெரிவுக் கோஷ்டியில் சென்ற வருடம் அங்கம் வகித்த பொலிஸ் வீரர்களான எச். கே. சந்திரரத்ன, எம். ஆர். அன்வர், கே எம். அன்ரனி. ரி. ரி மனன் ஆகியோர் விளையாடுவது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் ஆர். மகேந்திரன், ரி. கே. கஸீம், டபிள்யூ. சிறீல் ஆகியோரும் விளையாடுகின்றார்கள்.

### மாநகரசபைக் கோஷ்டி

யாழ். மாநகரசபைக் கோஷ்டிக்கு வீரர் எஸ். அன்ரனி தலைமை தாங்குகின்றார்.

இக் கோஷ்டியில் எம். தேவதாஸ், ஏ. நவம்ராசா, ஏ அஸ்ரின், டி. பி. ராசையா, ரி. மரியதாஸ், ஏ. செபமாலை ஆகியோரும் விளையாடுகிறார்கள். இவர்கள் அனைவரும்சென்ற வருடம் யாழ். தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்த வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாண தபால் நிலைய அதிபர் திரு பென்னடிற் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். இவரே இப்போட்டியை நடாத்துவதற்கு, மேற்படிச் சங்கத்துக்கு, விலை உயர்ந்த ஒரு வெள்ளிக் கிண்ணத்தை அன்பளிப்பாக வழங்கினார் எ பது குறிப்பிடத் தக்கது.

(தே. நி)

— —

## நாசவேலை 9 பேர் பலி

கல்கத்தா, ஜன 26

கல்கத்தாவின் ஒரு பகுதியில் நேற்று நடைபெற்ற நாசவேலை காரணமாக 9 பேர் கொல்லப்பட்டனர். தேவையான நபர் ஒருவரைப் பொலிசார் கைது செய்ததைத் தொடர்ந்து இந்த நாசவேலை நடைபெற்றதாம்.

இதில் சில பஸ்கள் தீக்கிரையாகின. மாடி வீடு ஒன்று குண்டுவீச்சுக்கு இலக்காகியது. கூக்கிளி நதிக்கரையில் அறுவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

— —

கூட்டுறவு

## வங்கிகள் கலைக்கப்பட்டன

கோட்டை, புதன்

கொழும்பு கூட்டுறவு மாவட்ட வங்கி, இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு வங்கி, திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவு வங்கி ஆகியவற்றை இம் மாதம் 25-ம் திகதியில் இருந்து நிதியமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா கலைத்துள்ளார். மக்கள் வங்கி இவ் வங்கிகளது உடமைகள்யாவற்றையும் பொறுப்பேற்றுள்ளது.

## நெசவு நிலையம் வேண்டும்

முசலி, புதன்

'மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற வங்காலை என்னும் கிராமத்தில் வசிக்கின்ற பெண்கள் வேலை வாய்ப்புப் பெற எந்தவிதமான சிறுகைத் தொழிலும் காணப்படவில்லை. இதனால் இங்குள்ள பெண்கள் வறுமையில் வாடவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. எனவே இக்குறையைப் போக்க வங்காலை என்னும் கிராமத்தில் ஒரு நெசவு நிலையத்தை நிறுவித்தர வேண்டும்.

இவ்வாறு வங்காலை கிராமசபைப் பகுதி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வங்காலை கிராமசபைத் தலைவர் திரு. இம்மனுவல் குருஸ், மன்னார் அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதனை மேற்படி கூட்டத்தில் கேட்டுள்ளார்.

— —

கி ச தேர்தல்

## அரசாங்க சேவையாளர் தெரிவு

அம்பன், செவ்வாய்

குடத்தனைக் கிராமசபையின் 11-ம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தலுக்குரிய நியமனப் பத்திரங்கள் குடத்தனைக் கிராமசபை மண்டபத்தில் தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது குடாரப்பைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பசுபதி மாத்திரமே நியமனப்பத்திரம் தாக்கல் செய்தமையினால் மேற்படி வட்டார அங்கத்தவராக சி, பசுபதி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். அரசாங்க சேவையிலிருந்து கொண்டு குடத்தனைக் கிராமசபைத் தேர்தலில் போட்டியிட்ட முதலாவது நபர் இவரேயாவர் இவர் கொழும்பு வருமான வரி இலாகாவில் பரிசோதகராக கடமை புரிகின்றார்:

—

## ஒரேயொரு மாணவ ஆசிரியர்

பல்லவராயன்கட்டு புதன்

பல்லவராயன் கட்டு அரசினர் சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை ஒரேயொரு மாணவ ஆசிரியருடனேயே இயங்கிவருகின்றது. இங்கு தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியர்களையும் நியமித்து ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் வடமாநில வித்தியாதிபதியிடம் கேட்டுள்ளது.

—

## மயிரிழையில் உயிர் தப்பினர்

புதுடில்லி, ஜன. 26

மேற்குவங்க மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்கள் சோதிபாசுவும் அப்துல்லா ரசீதும் காரில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது எறிகுண்டுவீசப்பட்டு மயிரிழையில்உயிர் தப்பினார்கள்.

தங்கள் காரை நோக்கி மூன்று நக்ஸலைட்டுகள்வந்ததாகவும் மூன்று குண்டுகளை வீசியதாகவும் தாங்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் திரு ஜோதிபாசு பின்னர்கூறினார் தங்கள்கார் பலத்த சேதமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.